பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 22 வெள்ளிக்கிழமை (05.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 191

# இலங்கைச் சட்டங்களிடமிருந்து வன்னி அகதிகள் நீதியை எதிர்பார்க்கவே முடியாது!

## வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகிறார் பிரதம நீதியரசர்



கொழும்பு, ஜூன் 06

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து செட்டிக்குளம் இடைத்தங்கல் மையங்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகள், இலங்கையின் சட்டங்களிடமிருந்து நீதியை எதிர்பார்ப்பதில் அர்த்தம் இல்லை. நீதியை அவர்கள் எதிர்பார்க்க முடியாது. இந்த அகதிகள் குறித்து இந்த நாட்டுச் சட்டங்கள் எந்தச் சிரத்தையும் காட்டவில்லை. நான் இதை வெளிப்படையாகவே கூறுகின்றேன். அதற்காக அதிகார வர்க்கத்தினர் என்னைத் தண்டிக்கக் கூட முடியும்.

- இப்படிப் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கின்றார் இலங்கையின் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக் கொடியுடன் வருபவர்கள் மீது சுடுவது தவறு

நியூயோர்க், ஜூன் 05

வெள்ளைக் கொடியுடன் வருபவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயம் என்று ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர்**

**உள்ளே**

தரம் 4 மாணவர்களுக்கான தயார்ப்படுத்தல் பரீட்சை வினாத்தாள்.

## ஏ-9 வீதியூடாகப் பொருள்களை எடுத்துச் செல்ல விரும்புவோரை பதிவு செய்ய அறிவுறுத்து

கொழும்பு, ஜூன், 05

'ஏ-9' (கண்டி) வீதி ஊடாக யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் நடவடிக்கை விஸ்தரிக்கப்பட உள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டனவா என்பது குறித்து விசாரணை நடத்தவேண்டும்

### மீண்டும் வலியுறுத்துகிறார் நவநீதம்பிள்ளை



கொழும்பு, ஜூன் 05

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டனவா என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு - இலங்கையில் நடைபெற்ற மோதல்களின் போது மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றன என்பதை உறுதி செய்யும் விசாரணைக்கு உதவி செய்ய ஐக்கிய நாடுகள் சபை தயாராகவுள்ளது.

மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றதை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் அங்கு முழுமையான தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கு சாத்தியம் இல்லை.

இலங்கையில் நீதி, தேசிய நல்லிணக்கம் மற்றும் சமாதானம் ஏற்பட மனித உரிமைகள் மீறல் இடம்பெற்றது என்பதை ஏற்றுக் கொள்வது முக்கியமானது- என்றார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான வன்னி வைத்தியர்கள் மூவரும் ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்கப்படுவர்

### அதன் பின்னரே அவர்கள் மீது வழக்காம்

கொழும்பு, ஜூன் 05

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து பணியாற்றிய வைத்தியர்கள் மூவரும் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரை தடுத்துவைக்கப்பட்டிருப்பார்கள். (18 ஆம் பக்கம் பார்க்க)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்துடன் பிரான்ஸிலிருந்து புறப்பட்ட 'கப்டன் அலி' கப்பல் இலங்கை கடல் எல்லையில் கைப்பற்றப்பட்டது!

## 'வணங்கா மண்' பெயர் மாற்றப்பட்டதாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

வன்னியில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென மருந்து, உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த 'கப்டன் அலி' என்ற கப்பலை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்துக்கு மேற்கே சுமார் 150 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று அதிகாலை 4 மணியளவில் வந்துகொண்டிருந்த 'கப்டன் அலி' என்ற கப்பலை கடற்படையினர் கைப்பற்றினர் எனக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அந்தக் கப்பலிலிருந்த 15 மாலுமிகளை கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அந்தக் கப்பலில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் உறுப்பினர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் பட்டினியால் மரணித்தால் ஐ.நா. சபையே பொறுப்பேற்க வேண்டும்

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகிறார்

வவுனியா அகதி முகாம்களில் உள்ள மக்கள் உணவின்றி பட்டினியால் மரணித்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டமே ஏற்கவேண்டும். இலங்கை அரசு அதற்குப் பொறுப்பல்ல.

-இப்படி மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐ.நாவை விடவும் இலங்கை அரசு தான்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வை முன்வைக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவளிக்கும்

### இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல்



கொழும்பு, ஜூன் 05

இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழி வகுக்கக் கூடிய முயற்சிகளுக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவைவழங்கும் என்று இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய நாடாளுமன்றத்தின் அமர்வை நேற்று ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமதி. ரூபினி வரதலிங்கம்

(இலங்கை நிர்வாக சேவை தரம் 1)

தாயின் அன்போடும் சேய் போன்று அலுவலர்களை அரவணைத்தும்
அலுவலகப் பணியிலக்குகளை அமைதியோடும் அர்ப்பணிப்புடனும்
நடாத்தி நல்ல தகமையின் மணிமகுடமாய் விளங்கினீர்கள்.
இலக்கு நோக்கி எம்மைத் துலக்கினீர்கள்.
இதமான வார்த்தைகளாய் எம் கலக்கங்களை போக்கினீர்கள்.
பிரதேச மக்களின் தேவைகளை நாடி பிடித்தறிந்து
வரப்பிரசாதமான திட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்தினீர்கள்
நலிவுற்ற மக்களுக்கு நல்ல செயற்பாடுகளை முன்னெடுத்து
அவர் தம் வலிகளைப் போக்கினீர்கள்
பிரதேச நலன் காத்த தாங்கள்
மாவட்ட நலன் காக்க மேலதிக அரசாங்க அதிபராய்
உயர்வு பெற்றுள்ளீர்கள்.
எம்மோடு துணைநின்று தாங்கள் ஆற்றிய பணிகளை
இந்த மண் என்றும் மறவாது.
தாங்கள் மேலும் பதவியுயர்வுகள் பெற்று
தங்கள் பணி இலக்குகளில் சிறக்க மனதார வாழ்த்துகின்றோம்.

+ உத்தியோகத்தர்கள்,பிரதேச செயலகம்,சண்டிலிப்பாய் +

**தென்மராட்சியில டெங்கு ஒழிப்பு தீவிரம்**

யாழ்ப்பாணம்,ஜூன்.5

பாடசாலை மாணவர்களிடையேடெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை சாவகச்சேரி நகர சபையினரும் சாவகச்சேரிசுகாதாரத் திணைக்களத்தினரும்இணைந்து நேற்று ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுத் தொடக்கம் ஒரு வார காலத்திற்குள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்த செயற்றிட்டங்கள் மாணவர்களுக்கு வீடியோப்பதிவுகள் மூலம் போதிக்கப் பட்டுவரவுள்ளன.

இத்திட்டத்தினை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(1-207)

**போயா ஆன்மீக நிகழ்ச்சி**

யாழ்ப்பாணம்,ஜூன்.5

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சி நாளை மறுதினம் ஞாயிற்றிக்கிழமைஅதிகாலை 5மணிக்கு நகரசங்கீர்த்தனம்இடம்பெற்று காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி ஓம்காரம், வேத பாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, நாராயணசேவை என்பவற்றுடன் மதியம் 12.30 மணிக்கு நிறைவுபெறும்.(1)

## கண்ணீர் சொரிகின்றோம்



..மது மணி கல்வி நிறுவனத்தின்
முன்னாள் விஞ்ஞான
ஆசிரியரான
*பற்குணம் சதீஸ்குமார் (சதீஸ்)*
எமை விட்டுப் பிரிந்ததையிட்டு ஆறாத் துயர் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

**வேலணை மணிகல்வி நிறுவன முன்னாள் ஆசிரிய நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

### *இராசையா நடராசா*

(சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையம், அம்பாள் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர்)



சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நடராசா நேற்று (04.06.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் தங்கராசா (கனடா), இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, மனோகரன், சிறிதரன் (பிரான்ஸ்), கருணாகரன் (பிரான்ஸ்), ஈஸ்வரி, ரதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறாந்தினி (மாலா), சாந்தகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமாரி (லண்டன்), சாந்தரூபன், சிவகுமார் (பிரான்ஸ்), கவிதா (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேந் திரம், வசந்தா (பிரான்ஸ்), சிவானந்தன் (லண்டன்), ·தர்மினி, சந்திரமோகன்(பருத்தித்துறை அஞ்சல் அலுவல கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கம்சிகா, கிரிசாந், இலக் சிகா, கிருஷிகா, நிருதா, நிரூபினி, சஜித், ராகுல், கனிவிழி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் கோயிலடி,
சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றித் தற்போது வட மாகாண பிரதம செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற எமது அபிமானத்தைப் பெற்ற

**உயர்திரு. ஆறுமுகசுவாமி சிவசுவாமி**

அவர்களுக்கு எமது மனமார்ந்த பாராட்டுதல்களையும் கடந்த காலங்களில் நேர்மையுடனும் பொறுமையுடனும் கடமையாற்றி ஒரு நிர்வாகியாக மட்டுமன்றி நண்பனாகவும் எமது மக்களுக்கான பணிகளுக்கு வழங்கிய உதவிகளுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.
பிரதேச செயலகம், நலன்புரிச்சங்கம் வலி.கிழக்கு, கோப்பாய்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு: |
|---|---|
| 18 | 17 |
| * | * |
| 03 | 05 |
| * | * |
| 1938 | 2008 |



நீநி:- நிரோபநசி

### *பொன்னையா தனபாலசிங்கம்*

மனைவி மக்களின் உறவைப் பேணி
எங்கள் சொத்தாக இருந்தீர் - நித்திலத்தில்
வித்தாகிப் போன பின்னும் எம் மனதில்
விருட்சமாக வாழ்வீர் வேரூன்றி

இல.66/06, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

**பாவனையாளர் ஒருங்கிணைப்புக் கூட்டம் நாவாந்துறையில்**

வண்ணை, ஜூன் 5

யாழ்.பிரதேச செயலக பாவனையாளர் ஒருங்கிணைப்புக்குழு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பாவனையாளர் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு ஜே/85 கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட பாவனையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-160)

**வாண்மை விருத்தி செயலமர்வு**

யாழ்ப்பாணம்,
ஜூன். 5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார்.

(1-207)

## மரண அறிவித்தல்

### *பற்குணன் சதீஸ்குமார்* (Dip.in Nursing)

(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.762, பருத்தித்துறை வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட பற்குணன் சதீஸ்குமார் நேற்று (04.06.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காரைநகரைச் சேர்ந்த செல்லத்துரை பற்குணன் (குகன் ஸ்ரோர்ஸ்) - திருமதி மங்களராணி பற்குணன் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் வளர்மதியின் (ஆசிரியை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்) பாசமிகு கணவரும் திரு.திருமதி தெய்வேந்திரம் - சுமதி தம்பதியினரின் மருமகனும் சைலஜா (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், நல்லூர் பிரதேச செயலகம்), செல்வகுமார் (முகாமைத்துவ பயிலுநர், இலங்கை வங்கி, யாழ்.மேற்தரக்கிளை), றேனுஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விகிர்தன் (நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்ப்பாணம்), பிரபாகரன் (உரிமையாளர், கரன் எலெக்ரிக்கல், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், செல்லையா மற்றும் சிதம்பரராணி, காலஞ்சென்ற மதுரராணி, சிறீரங்கராணி, காலஞ்சென்ற முத்துராணி ஆகியோரின் பெறாமகனும் சரோஜினிதேவி, மகாலட்சுமி, பாலகோபால், ஜெயகோபால், இராஜகோபால் ஆகியோரின் மருமகனும் அக்ஷயனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2009) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப. 12 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.762, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆயுதப் போராட்ட வெற்றி வேறு தமிழரின் உள்ளங்களை வெல்வது வேறு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நிர்மூலமாக்கி, நிரந்தரமாக அழித்து விட்டதாகப் பிரகடனப்படுத்தியுள்ள இலங்கை அரசு, அதையொட்டிய வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வை 'தேசிய வெற்றித் திருவிழா' ஆக நேற்றுமுன்தினம் அனுஷ்டித்தது.

தலைநகர் கொழும்பில் காலிமுகத்திடலில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளின்போது நடு நாயகராகப் பங்குபற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை வெற்றிப் பெருமிதத்தில் மிதக்கும் தென்னிலங்கை மக்களுக்கு மேலும் புளகாங்கிதத்தை ஏற்படுத் தியிருக்கும் என்பது நிச்சயம்.

ஆனால் ஏற்கனவே போரின் பேரழிவினால் துவண்டு, யுத்த நலிவின் பின்னடைவுகளால் அவமானப்பட்டுப் போயிருக்கும் ஈழத் தமிழினத்தின் நொந்த மனதுக்கு மருந்து பூசுவதாக அந்தப் பேச்சு அமையவேயில்லை. மாறாக,சிறுபான்மையினர் குறித்து ஒரு புறக்கணிப்புப் போக்கே அதில் தென்பட்டது. இந்த உதாசீனம் தமிழர்களைப் பொறுத்தவரையில் புண்ணுக்கு மருந்தல்ல, புண் ணுக்குப் புளி போட்டது போன்ற வலியையே தந்து நிற் கின்றது.

தமிழ் மக்களின் மனங்களை வெல்ல, அவர்களின் பிரதிநிதிகளுடன் பேசி நியாயத் தீர்வு ஒன்றை அவர்க ளுக்கு வழங்குவதுதான் ஒரேவழி. அதை விடுத்து - தமிழர்களுடன் பேசுவதை விடுத்து - தமிழில் சில வச னங்களைப் பேசினால் தமிழர்களின் மனங்களை வென்று விடலாம் என ஜனாதிபதி நினைக்கின்றார் போலும். இந்த நிகழ்விலும்சில வசனங்களைத் தமிழில் எடுத்து விட்டிருக்கின்றார் அவர். அதிலும் ஒரு சிறு வித்தியாசம். இந்தத் தடவை படையினருக்கான செய்தியை தமிழில் வாசித்திருக்கின்றார் அவர்.

*''அன்பான படை வீரர்களே! இப்போது பயங்கர வாதிகளுடன் செய்த யுத்தம் முடிவடைந்து விட்டது. இனி நாம் எமது தமிழ் மக்களுடைய உள்ளங்களை வெற்றி கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் பயம், சந்தேகம் இல்லாமல் வாழ வேண்டும். அது தான் நம் எல்லோருடைய கடமையாகவும் இருக்க வேண்டும்.''* - என்ற சாரப்பட தமிழில் கூறியிருக்கின்றார் அவர்.

இலங்கைப் படைகளின் போக்கும் நோக்கும் குறித்தும் ஈழத் தமிழர்களுக்கு உள்ள பேரச்சம் பற்றியும் ஜனாதிபதி உணர்ந்திருக்கின்றார் போலும். அதனால்தான் அத்தகைய பீதியை ஏற்படுத்தக்கூடாது என்ற பணிப் புரையைத் தமது படையினருக்குத் தாம் விடுப்பதைத் தமிழிலும் வெளிப் படுத்திக் காட்டியிருக்கின்றார் அவர்.

எப்படியென்றாலும், வெற்றிக்களிப்பில் திளைக்கும் இலங்கைப் படைகள் குறித்து ஈழத் தமிழருக்கு அச்சம் இருப்பது அரசுத் தலைமைக்குப் புரிந்தவரை நல்லதுதான்.

தமிழர்கள் பயம், சந்தேகமின்றி வாழ வழிசெய்ய வேண்டும் என்ற கருத்து வரவேற்கத்தக்கதே. ஆனால் அவை மட்டும் போதுமானவையல்ல. அவை மட்டுமே ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளாகிவிடா. அவையும் பிரச்சி னைகளே. அவற்றுக்கு அப்பாலும் பிரத்தியேகமான - பிரதான மான - பிரச்சினைகள், இனச்சிக்கல்கள் அவர்களுக்கு உள்ளன.

முதலில் அடிமைத் தளையிலிருந்து - ஒடுக்கு முறையிலிருந்து - அவர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு கௌரவத்துடன் கூடிய தீர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும். அதுவே அவர்களின் பிரதான பிரச்சினை.

ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்ட வலிமையை இன்று அடியோடு அழித்துத் தகர்த்து விட்டதாகத் தெரிவித்து, இலங்கை அரசு பெரும் வெற்றி விழாக் கொண்டாடுகின்றது. தமிழரின் இந்த ஆயுதப் போராட்டம் என்பது தமிழர்களின் பீதியாலும், சந்தேகத்தாலும் மட்டும் உரு வானதல்ல. அவர்களுக்கு எதிரான அடக்குமுறை, அந்த அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்காக அவர்கள் முன்னெடுத்த அறவழிப் போராட்டங்கள் ஆயுத பலாத்காரம் மூலம் ஒடுக்கப்பட்டமை, அவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்த மிக மோசமான அரச பயங்கரவாதம் போன் றவற்றின் விளைவாகவே ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்துப் பின் தீவிரமடைந்தது. அரச அடக்குமுறையே அந்த ஆயுதப் போராட்டத்தின் ஊற்றுக்கண்.

ஆகவே தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை வெற்றி காண்பதற்கான எதுவும் அதன் ஊற்றுக்கண்களை அடைப்பதன் மூலமே நிரந்தரமாகச் சாத்தியமாக முடியும்.

ஆனால் அந்த ஆயுதப் போராட்டத்தை முழுமையாக அடக்கிவிட்டதாகப் பிரகடனப் படுத்தப்பட்டு, முன்னெடுக்கப்பட்ட தேசியக் கொண்டாட்ட நிகழ்வுகளில் இந்த ஊற்றுக் கண்களை அடைக்கும் வழிவகைகள் பற்றி பிரஸ் தாபிக்கப்படவேயில்லை என்பது இத் தேசத்தின் துர திஷ்டமன்றி வேறில்லை.

''(இந்த இராணுவ வெற்றியின் பின்னர்) நாங்கள் வழங்கப் போகும் தீர்வுகளில் இனவாத, பிரிவினை வாதத்துக்கு இடமளிக்காத அதேநேரம், அவற்றின் நிழல் கூடப் படிந்திருக்க விடலாகாது. ஒன்றுபடுத்தப்பட்ட தேசத்தை இரண்டாகப் பிளவுபடுத்தாத - வலயத்தின் சமாதானத்துக்குக் குந்தகமில்லாத - ஏற்றுக்கொள்ளக்கூடியதான - எங்களுடைய செயற்றிட்டம் ஒன்றுக்குச் செல்லவுள்ளோம்.'' - என்ற சாரப்பட ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய - அவர்களுக்கு கௌரவமான வாழ்வை உறுதி செய்யக்கூடிய - நீதியான தீர்வு ஒன்றை முன்வைப்பேன் என்று உறுதி கூற நாட்டின் தலைவர் முன்வரவில்லை; அதற்கு அவர் தயாரில்லை.

அதனைச் செய்யாமல், ஆயுதப் போராட்டத்தில் வெற்றி பெற்றதாகக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. அது தமிழர்களின் உள்ளங்களை வென்றதாகவும் அர்த்த மாகாது.

# இலங்கையில் யுத்தத்தின் பின்னரும் தொடரும் மனித உரிமை மீறல்கள்

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஜூன்5

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் பின்னர் ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் மற்றும் கொலைகள் என்பன இடம்பெறாமல் இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதுகாப்புப் படைவீரர்கள், வர்த்தகர்கள் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தமையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய நிலை பணிப்பாளர், பரட் அடம்ஸ் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதுடன், அவர்கள் மதிக்கப்படவும் வேண்டும் எனக் கோரியுள்ளார்.

ஏற்கனவே இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும்,தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் துரோகிகள் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண, சிங்கள ஊடகவியலாளர்கள் சிலர், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடுப்பனவுப் பட்டியலில் இருந்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளமையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னர் சுமார் 600 பேர் வரை காணாமற்போயிருந்தனர். அத்துடன் பாரிய மனித புதைகுழியும் கைப்பற்றப்பட்டிருந்தது. எனினும் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் படையினருக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இதனைத் தவிர கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும், படையினராலும் ஆயுதக்குழுக்களாலும், பலர் கடத்தப்பட்டுக் காணாமற்போயினர்.

இந்நிலையில், தற்போது இலங்கை அரசாங்கம் காணாமற்போதல் மற் றும் கைதுகள், கொலைகள் என்பவை இடம் பெறாமல், தமிழர்களைப் பாதுகாத்து, இனங்களுக்கிடையில் நல்லுறவைக் காக்க வேண்டும் என பரட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

மேலும்,

வவுனியாவில், வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் மூன்று லட்சம் மக்கள் சுதந்திர நடமாட்டமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சுமார் 9 ஆயிரம் பேர் வரை தமிழீழ விடுதலைப்புலிகள் எனக்குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் அவர்களைப் பார்வையிட எவ்வித அனுமதிகளும் வழங்கப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் பொதுமக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும், நலன்புரி முகாம்களில் உள்ள பொதுமக்களையும் இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனப்படி நடத்தவேண்டும் என பரட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார். (50)

# வடபகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களில் பெற்றோர், பாதுகாவலர் இல்லாத 350 சிறார்கள்

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 5

வடபகுதியில் உள்ள முகாம்களில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத 350 சிறுவர்கள் இருப்பதாக அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். இந்தச் சிறுவர்கள் அனைவரும் 10 வயதுக்கும் குறைந்தவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சிறுவர்களுக்கான உணவு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் முகாம்களில் உள்ள நிவாரண சேவை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவதாகவும் பதியுதீன் கூறியுள்ளார்.

இதனைத் தவிர 250 பல்கலைக்கழக மாணவர்கள் முகாம்களில் இடம்பெயர்ந்த நிலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை வேறு பல்கலைக்கழகங்களில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பெற்றோரை இழந்த 350 சிறுவர்கள் மற்றும் 250 பல்லைக்கழக மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கான உதவிகளை வழங்க சிங்கப்பூரில் உள்ள வர்த்தகர்கள் சிலர் முன்வந்துள்ளனர். சிங்கப்பூரில் உள்ள பௌத்த இளைஞர் சங்கத்தின் சமய ஆலோசகர் கலாநிதி அலவ்வே குணரத்ன தேரரின் தலைமையில் இந்த உதவிகளை வழங்க சிங்கப்பூர் வர்த்தகர்கள் முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். (50)

# வவுனியா முகாம்களில் பணியாற்ற மேலதிக வைத்தியர்கள் தேவை

கொழும்பு,ஜூன்5

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலதிக வைத்தியர்கள் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் நிறுவப்பட்டுள்ள 29 நலன்புரி நிலையங்களில் கடமையாற்ற போதியளவு வைத்தியர்கள் அமர்த்தப்படவேண்டுமென அமைச்சரவை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம் நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்த கட்டட நிர்மாண அமைச்சர் ராஜித சேனாரத்ன அகதிகளின் நிலைமை குறித்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

24 மணித்தியாலங்களும் அகதிகளுக்குச் சிகிச்சையளிக்க வைத்தியர்களை நியமிக்க வேண்டுமென பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (50)

# இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் மீதான மனு

## விசாரணைத் திகதி நீடிப்பு

கொழும்பு,ஜூன்5

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதாக குற்றம் சுமத்தி, இலங்கை கோரிய 1.9 பில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியம் வழங்கக்கூடாது எனக்கோரி தமிழர் படுகொலைகளுக்கு எதிரான அமைப்பின் புருஸ் பெய்ன் தாக்கல் செய்த மனுவின் விசாரணைத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 29 ஆம் திகதி இந்த நீடிப்பை அமெரிக்க கொலம்பிய மாகாண நீதிமன்ற நீதிபதி ரிச்சட் ஜே லியொன் நேற்று வழங்கியுள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் மெக், அமெரிக்க திறைசேரியின் செயலாளர் திமொத்தி கெய்த்னர் ஆகியோர் புருஸ் பெய்னினால் கோரப்பட்டமைக்கு ஏற்பவே நீதிபதி திகதி நீடிப்புக்கான அனுமதி வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட எதிர்பார்க்கும் கடன் தொடர்பில் அமெரிக்கா எதிர்வரும் 29 ஆம் திகதி வரை வாக்களிக்முடியாத நிலை ஏற்பட்டள்ளது. (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 23 | 06.06.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | மு.இ. 10.49 வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | மு.ப. 09.51 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 5

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழா இடம் பெறவுள்ளது. காலை 6.30 மணிக்கு அபிஷேகம், 7.30 மணிக்குத் தம்ப பூசை, 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று 10.30 மணியளவில் சுவாமி தேரில் எழுந்தருளுவார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். அன்று மாலை 5 மணிக்குக் கொடியிறக்கம் இடம்பெறும். (203)

# தாவடி கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 5

தாவடி அம்பலவாண கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8.30 வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றன.

இன்று கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆசீர்வாதமும், பிரதமகுரு பிரம்மஸ்ரீ தானு வாசுதேவ சிவாச்சாரியாரின் ஆசியுரை என்பனவும் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு மகா அபிஷேகம் இடம் பெறும்.

மாலை 4 மண்இக்கு மூலவர் பூசை, வள்ளி தெய்வானை திருமணம் என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

(சிறப்பு மலர் 8-9 ஆம் பக்கங்களில்)

# இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிராக லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூன் 5

இலங்கைக் கிரிக்கெட் அணியை நாட்டுக்குத் திருப்பி அனுப்புமாறு கோரியும், ஏனைய நாடுகள் போட்டியை பகிஷ்கரிக்கக் கோரியும் லண்டன் வெலிங்டன் வீதியில் லண்டன் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இன்று 5 ஆம் திகதி லண்டனில் இடம்பெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கை அணி அங்கு சென்றுள்ளது. இதனையடுத்தே நேற்றுமுன் தினம் புதன்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளதால் உலக அரங்கில் இலங்கை கிரிக்கெட் அணி புறக்கணிக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியிருந்தனர்.

தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற பயிற்சிப் போட்டியின்போது மைதானத்திற்கு வெளியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத நாடொன்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கிரிக்கெட் அணி உலக நாடுகளுடன் போட்டியிடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாதென ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்துள்ளனர். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈ.எஸ்.பி.நாகரத்தினம் சக நிறுவனத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் நிறுவனத்தின் உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் மங்கள விளக்கேற்றுவதையும் சிவாச்சாரியர்கள் சமய அனுட்டானங்களை நிகழ்த்துவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்ட வாடிக்கையாளர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம்.


## மகளிர்களுக்கான மனைமுகாமைதிறன் விருத்தி பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பின்வரும் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

1. மனைப்பொருளியல் டிப்ளோமாப் பயிற்சி (9மாதம்)
2. மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி (6 மாதம்)
3. சுயமுயற்சி பயிற்சி (2 மாதம்)
4. கணனிப்பயிற்சி

மற்றும்

Facial, Fondan Icing & Sugar Graft, New Fashion Hair Styles & Bridel Make Up

**விண்ணப்ப முடிவு திகதி - 22.06.2009**

விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் ரூபா 20 செலுத்தி சபையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி*

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப
கட்டடத்தொகுதி 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/558856)



## காரைநகர் - களபூமி இந்து இளைஞர் மன்றம் முக்கிய அறிவித்தல்

எமது மன்றத்திற்கு வழங்கப்படும் எவ்வகையான அன்பளிப்புக்களும் (பணமாக அல்லது பொருளாக)

1. தலைவர் : திரு.த.தியாகலிங்கம்
2. பொருளாளர் : திரு.சி.குமாரசேகரன்

என்பவர்களது கையெழுத்துடனான எமது பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமும்

இலங்கை வங்கி யாழ்ப்பாணக்கிளை
சேமிப்புக் கணக்கிலக்கம் - 1116381

என்பதன் ஊடாகவும் வழங்குமாறு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற களபூமிச் சைவப் பெருமக்களையும் இளைஞர், யுவதிகளையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது மன்றத்தின் பெயரால் வேறு நபர்கள், நிறுவன அங்கத்தவர்கள் சேகரிக்கும் எவ்வகையான அன்பளிப்புகளுக்கும் எமது மன்றமும் நாமும் பொறுப்பாளிகள் இல்லை என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றோம்.

இந்து இளைஞர் மன்றம்,
களபூமி - காரைநகர்.

(86005)


## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 ★ 10 ★ 1951

மறைவு 05 ★ 06 ★ 1992



### அமரர் துரை தெய்வேந்திரம்

திதி: திரயோதசி

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
தரணியில் எம்மை ஆளாக்கிய தெய்வமே
எம்மைவிட்டு 17 ஆண்டுகள் சென்றாலும்
எம் உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பீர்.

109 A, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (86012) குடும்பத்தினர்

## சிறைச்சாலை வாகனத்துக்கு வழிவிட மறுத்த சாரதிக்கு 7,500 ரூபா அபராதம்

வலி.வடக்கு, ஜூன்.5

சிறைச்சாலைக் கைதிகளை கொண்டு சென்ற வாகனத்துக்கு வழிவிட மறுத்து மினி பஸ்சை செலுத்திச்சென்ற சாரதிக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் 7 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டமாக விதிக்கப் பட்டள்ளது. மினி பஸ்ஸும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீதி வழியாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு காலை சிறைக்கைதிகளைக் கொண்டு சென்ற வாகனம் குறிப்பிட்ட மினி பஸ்சை பல தடவைகள் முன் செல்வதற்கு விலத்தி விடுமாறு சைகை செய்த போதும் அதனை அசட்டை செய்து நீண்ட தூரம் மினி பஸ் சாரதி வாகனத்தைச் செலுத்தி வந்துள்ளார்.

வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த சுன்னாகம் பொலிஸார் குறிப்பிட்ட வாகனத்தை மறித்து சிறைச்சாலை வாகனம் செல்ல வழியேற்படுத்தியதுடன் வாகன சாரதியையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தார்கள்.

சாரதி தனது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இந்தத் தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

(1-86)

## குறித்த இடங்களில் நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 5

இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் பிரதேச அலுவலகத்தால் நாளை சனிக்கிழமை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை குறிப்பிட்ட இடங்களில் மின்தடை ஏற்படும் என்று சுன்னாகம் பிரதேச மின்பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன் தெரிவித்துள்ளார்.

கந்தரோடை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் மின்தடை ஏற்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1976 ஆம் ஆண்டு, சுவாதி 7 இல் செவ்வாய், 45 பாவம், தனியார் துறையில் பணிபுரியும் மணமகனுக்கு நற்குணமுள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. தொடர்பு: 077 1750816



## ஊழியர் தேவை

நெல்லியடியில் இயங்கும் Electronic விற்பனை நிலையத்திற்கு பில் கிளார்க் விற்பனையாளர் தேவை (வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும்).

தொடர்பு: ஸ்ரார் கலர் லாப்
யாழ் வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 3970
0777 422604

(85900)


## கண்ணீர் அஞ்சலி

எமது வாசகர் வட்ட உறுப்பினர்
திரு.சி.சச்சிதானந்தஐயா
அவர்களது தந்தையார்
துரைச்சாமி ஐயர் சிவசிதம்பரதேசிகர்

அவர்களது சிவ பதப்பேறு அறிந்து மன வேதனை அடைவதோடு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா [illegible]

[illegible]
வட்டுக்கோட்டை. அங்கத்தவர்கள்.

(86004)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஐயா பாலகுமாரநாதன் (கண்மணி)



இரத்தினபுரியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா பாலகுமாரநாதன் (கண்மணி) 03.06.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தம்பிஐயா (ஆசிரியர்) - கண்ணம்மா (ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகனும் கிறிஸ்டபெல் காந்திமதியின் (ஓய்வு பெற்ற ஊழியர், இலங்கை வங்கி) பாசமிகு கணவரும் லோகினி (ஆசிரியை), கஜனி ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மகேந்திரநாதன் (கனடா) மற்றும் ரவீந்திரநாதன் (அவிசாவளை சிறீலங்கா இன்சூரன்ஸ், கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தம்பு (கமலா வோர்ச், காங்கேசன்துறை) - புஸ்பமணி தம்பதியரின் மருமகனும் சத்தியராஜின் (C.E.B) மாமனும் பாலசிங்கத்தின் (அவிசாவளை) மருமகனும் ராதிகா, குகனேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52, பிரதான வீதி,
ஆனைக்கோட்டை.
T.P: 2222753 (86006)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### அப்புக்குட்டி இராசையா (சேனாதி)

(சித்தன்கேணி நாககன்னி அம்மன் ஆலய தலைவர்)



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி இராசையா (சேனாதி) அவர்கள் நேற்று (04.06.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும் இராசாத்தி, இராஜேஸ்வரி, சறோஜாதேவி, விமலா, வசந்தி, சாந்தினி, ஜெயந்தினி, கணேசரத்தினம் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர்களான அப்புத்துரை, தம்பு, தங்கராசா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனபாலசிங்கம், புஸ்பராசா ஆகியோரின் அன்பு மாமனும் துரைராசா, நவரத்தினம் (இத்தாலி), நேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிர்மலா, நிசாந்தினி, தனுராஜ், தனுஷியா, தனுவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளான் விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி,
நாககன்னி அம்மன் கோயிலடி,
சித்தன்கேணி. (86007)

தகவல்:
குடும்பத்தினரும்
இந்திரன் ஐயாவும்

### ஆறுமுகம் இராசநாயகம்

வீமன்காமம் டச்சுவீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் இராசநாயகம் நேற்று (04.06.2009) வியாழக்கிழமை வவுனியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் புதல்வராவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.06.2009) வெள்ளிக்கிழமை தோணிக்கல், 2ஆம் ஒழுங்கை, வவுனியா என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் சகோதரர் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருவோர்:

ஆறுமுகம் பரமேஸ்வரன்,
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (86014)

இ.யோகேஸ்வரி (தேவி),
அரசடி வீதி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்ட ஆண்களுக்கான கபடியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி சம்பியன்



முதலிடம் பெற்ற பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி



இரண்டாமிடம் பெற்ற தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி

வலி.வடக்கு,ஜூன்5

யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடத்திய ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் இரு அணிகளும் வேகமாக விளையாடியபோதிலும், இரண்டாம் பாதி ஆட்டம் சற்று மந்தமாகவே காணப்பட்டது.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை பருத்தித்துறை அணியின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டன. முதல்பாதி ஆட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 41:19 என்ற புள்ளிகள் நிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 36:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 77:34 புள்ளிகள் அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (50-86)

## ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்5

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் யாழ்.மாவட்ட ரீதியாக ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 20ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி 10 கிலோமீற்றர் கொண்டதாகவும், பெண்களுக்கான போட்டி 5 கிலோமீற்றர் கொண்டதாகவும் நடத்தப்படவுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புகின்ற 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-9)

## 10ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி நாளை

வலி.வடக்கு,ஜூன்5

. யாழ்.செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திவரும் விளையாட்டுப் போட்டித் தொடரில் தடகள விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள், பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள், வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு மைதானத்திற்குச் சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (50-86)

# ஹாட்லிக் கல்லூரியுடனான ஆட்டத்தில் யாழ்.இந்து அணி 190 ஓட்டங்களால் வெற்றி

வலி.வடக்கு,ஜூன்5

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 17 வயதுப் பிரிவினர்களுக்கான லீக் முறையிலான கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 190 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 7 விக்கெட்டுகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

டிலக்சன் 15 நான்குகளுடன் 94 ஓட்டங்களையும், அனோஜன் 43 ஓட்டங்களையும், செந்தூரன் 37 ஓட்டங்களையும், கிரிசோபன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 42 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த நிசாந்தன் 31 ஓவர்கள் பந்துவீசி 2 விக்கெட்டுகளையும், அஜந்தன், புருசோத்தமன், விஷ்ணுகாந் முறையே 23, 30, 45 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

267 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 25.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

அஜந்தன் 24 ஓட்டங்களையும் நிவேதன் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிவேந்திரன் 8 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், கஜீவ்ராஜ் 5 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், பார்த்தீபன் 1.3 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், வினுஜன் 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் கிண்ணம் வென்றது யூனியன் கல்லூரி

வலி.வடக்கு,ஜூன்5

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மூன்று போட்டிகளின் அடிப்படையில் சம்பியன் அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் முதல் தடவையாக இடம்பெற்ற இப்போட்டியில் தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியன முதல் தடவையாகக் ஹொக்கி அணிகளைக் களத்தில் இறக்கியுள்ளன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் இப்போட்டியில் கலந்துகொண்டது.

மூன்று அணிகளுக்கும் இடையே போட்டிகள் லீக் முறையில் இடம்பெற்றன. இதனடிப்படையில் யூனியன் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யூனியன் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

குளமங்கால் றோ.க.த.க. பாடசாலைக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

யூனியன் கல்லூரிக்கும் குளமங்கால் றோ.க.த.க. பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டி தலா ஒரு கோலைப் பெற்றுச் சமநிலையில் முடிவடைந்தபோதிலும், மேலதிகமாக வழங்கப்பட்ட நேரத்தில் யூனியன் கல்லூரி மேலும் ஒரு கோலைப் பெற்று 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

இந்தப்போட்டிகளின் அடிப்படையில் இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற யூனியன் கல்லூரி முதலாம் இடத்தையும் ஒரு போட்டியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், குளமங்கால் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-86)

# தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி முடிவுகள்

மண்டுவில்,ஜூன்5

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:

*உதைபந்தாட்டம் (ஆண்):* வளர்மதி வி.கழகம், வரணி இளைஞர் வி.கழகம்.

*உதைபந்தாட்டம் (பெண்):* வளர்மதி வி.கழகம், துர்க்கா வி.கழகம்.

*எல்லே போட்டி (ஆண்):* மட்டுவில் வளர்மதி வி.க., கலைவாணி ஸ்ரார் வி.க.

*எல்லே போட்டி (பெண்):* தென்னகத் தாரகை வி.க., மோகனதாஸ் வி.க.

*மென்பந்தாட்டம் (ஆண்):* ஸ்ரீவிநாயகர் வி.க., குமரன் வி.க.

*மென்பந்தாட்டம் (பெண்):* மட்டுவில் வளர்மதி வி.க., மோகனதாஸ் வி.க.

*வலைப்பந்தாட்டம்:* தென்னகத் தாரகை வி.க., வரணி இளைஞர் வி.க.

*கரப்பந்து (பெண்):* ஸ்ரீ மகாவிஷ்ணு வி.க., துர்க்கா வி.க. (50-59)

# பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் மன்னாரை வீழ்த்தியது யாழ்.மாவட்ட அணி

வலி.வடக்கு,ஜூன்5

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி வடமாகாண சம்பியனாகியது.

திருகோணமலையில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை யாழ்.மாவட்ட அணியின் விளையாட்டுக்கு ஈடுகொடுத்து விளையாடக் கூடிய நிலையில் மன்னார் மாவட்ட அணி காணப்படவில்லை.

இதன்காரணமாக போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை யாழ்.மாவட்ட அணி மிகவும் சிறப்பாக விளையாடியது.

முதல்பாதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 27:15 என்ற புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணி பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 34:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் இருந்தது.

போட்டி நிறைவில் யாழ்.மாவட்ட அணி 61:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் மாவட்ட அணியை வெற்றிபெற்று வடமாகாண மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் தேசிய மட்டத்திலும் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (50-86)



யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆண்கள், பெண்களுக்கான 15 வயதுப் பிரிவுக் கரப்பந்தாட்டப் போட்டிகளில் மாவட்டச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்ட அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணிகளுடன் அதிபர், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராசா மற்றும் பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள் நிற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தின் சிறப்புத் தேர் வெள்ளோட்ட விழாவில் தேருக்கான கலசம் வீதியுலா வருவதை முதலாவது படத்திலும் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம்பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த ஸ்தபதி செ.பாலச்சந்திரனுக்கு ஆலய பரிபாலன சபையினர் பொற்கிளி, மற்றும் விருது வழங்கி கௌரவிப்பதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்:நந்தன்)

# ஜெனிவா கோட்பாடுகள் யாவும் இலங்கை நாட்டில் மீறப்படுகின்றன

## தமிழர் ஊர்வலத்துக்கு ஆதரவு தெரிவித்து அந்நகர மேயர் வெளியிட்டுள்ள கருத்து

ஜெனிவா, ஜூன் 5

இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்று கூறியும் அங்கு தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பாக உலக கவனத்தைத் திருப்பும் முகமாகவும் சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழர்கள் கவன ஈர்ப்பு நடைபவனி ஒன்றை முன்னெடுத்து வருகிறார்கள்.

கடந்த முதலாம் திகதி ஜெனிவாவிலுள்ள காருக் என்ற இடத்திலிருந்து முதல் கட்டமாக 50 தமிழர்கள் இந்த நடைபவனியை ஆரம்பித்தார்கள். ஜூன் 17 ஆம் திகதி பேர்ன் நகரில் இந்த பவனி முற்றுப்பெறும்.

**ஜெனிவா மேயர் ஆதரவு**

ஜெனிவா நகரமேயர் றெமிபகனி, சுவிஸ்வாழ் தமிழ் மக்களின் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளார்.

அந்த நாட்டில் ஜெனிவா கோட்பாடுகள் யாவும் மீறப்படுகின்றன என்று கூறியுள்ள ஜெனிவா மேயர் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது தொடர்பாக சர்வதேச சமூகம் தன் கண்களை மூடிக்கொண்டு இருக்கலாகாது என்றும் இடித்துரைத்துள்ளார்.

தமிழ் அகதி மக்களுக்கு சுவிட்சர்லாந்து தன் கதவுகளைத் திறந்து விடவேண்டும் என்று ஆர்ப்பாட்ட பவனியில் ஈடுபட்டுள்ள ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளார்கள்.

அனுமதி மீறுக்கப்பட்ட அகதி அந்தஸ்து கோரியுள்ளவர்களைத் தொடர்ந்தும் திருப்பியனுப்ப வேண்டும் என்பதாகத் தீர்மானம் ஒன்றை கடந்தவாரம் சுவிஸ் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

இந்த நடைமுறையை எதிர்ப்பவர்கள், அகதி அந்தஸ்து கோரும் மக்கள் திருப்பி அனுப்பப்படுவார்களானால் அங்கு அரச சார்பு அமைப்புகளாலும் ஆதரவாளர்களாலும் பழிதீர்க்கப்படுவார்கள் என்று எடுத்துக் கூறி வருகிறார்கள். (ப)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசிப் பெருவிழா

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் வருடாந்த வைகாசிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரவைத் தலைவர் எஸ்.அருள்தங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்வுகளின் வரிசையில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் சிறப்பு சொற்பொழிவு நடைபெறும். அத்துடன் வாராந்த நிகழ்வு வரிசையில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். இறுதியாக அறுபத்து மூன்று நாயன்மார்களின் குரு பூசையும் மகேஸ்வரபூசையும் நடைபெறும். (1-236)

# வன்னியில் படுகாயமுற்றோர் கொழும்பு வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 05

வன்னியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது படுகாயமடைந்த பல அப்பாவிகளில் ஒரு சிறுபகுதியினர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கும் பொது மக்களின், அவசர, அவசிய மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வாட் இலக்கம் 72 மற்றும் 73 இல் சேர்க்கப்பட்டுள்ள இம் மக்களுக்கு உதவியளிக்க சிந்தையுள்ளோர் தொலைபேசி இலக்கம் 0777306473 ஊடாக தி. பரமேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு விடயங்களை அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோயாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், உதவிகளையும் பெற்றுக் கொடுக்கும் முதனிலை நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். (சி)

## பொருளியல் கருத்தரங்கு 9 ஆம், 10 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 5

இவ்வாண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென 'சீமா'(CIMA) நிறுவனமும் யாழ்.வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து நடத்தும் பொருளியல் பாடக் கருத்தரங்கு எதிர் வரும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி ரவீந்திரகுமாரன், கலாநிதி எஸ்.கணேசமூர்த்தி ஆகியோர் இதில் வளவாளர்களாகக் கலந்து கொள்வார்கள். (50)

## ஆங்கில தின எழுத்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 5

மாவட்ட மட்ட ஆங்கில தின எழுத்து மூலப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ. வேதநாயகம் அறிவித்துள்ளார். முன்னர் இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (201)


**யா/இணுவில் மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும் - 2009**

தலைவர் : திரு அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்)
காலம் : 07.06.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணி
இடம் : கல்லூரி சரஸ்வதி கலையரங்கம்
பிரதம விருந்தினர்:
கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன்
(தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்பு)
சிறப்பு விருந்தினர்: உயர் திரு செ.குபேரநாதன்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)
கௌரவ விருந்தினர்: திரு. நடராஜா ஜெயசீலன்
(உபபரிசோதகர், பாடசாலை வேலைப்பகுதி, வலிகாமம் வலயம்),
பரிசில் வழங்கல்: திருமதி ரோகினி மகேஸ்வரன்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
இணுவில். (85875)

**மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**
**75 ஆவது வசந்த மகோற்சவப் பெருவிழா திருமுகம்**

நிகழும் விரோதி வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2009 சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு துவஜரோகணமாகி 10 தினங்கள் காலை, மாலை மகோற்சவம் நடைபெறும்.
பி.ப 4 மணிக்கு திருவிழா முடிவுறும். தினமும் அன்னதானம் நடைபெறும்.
ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக் குருக்கள், அறங்காவலர்.
(85896)

**ஈசன் திருமண சேவை**
நீங்கள் எதிர்பார்க்கும் மணமகன் / மணமகளைத் தெரிவுசெய்ய தொடர்பு கொள்ளவும்.
வட்டு. வடக்கு, வட்டுக்கோட்டை.
0217900315, 0712124350
(85895)

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம், 1979 சுவாதி நட்சத்திரம், 8 செவ்வாய் (பாவம் குறைவு) மலேசியாவில் தொழில்புரிந்து தற்போது நுவரெலியாவில் சொந்தமாக் கடை நடத்தும் மணமகனுக்கு குணமான மணப்பெண் தேவை.
தொடர்பு: 0771544638, 0755151002
(85874)


## முதியோருக்கு படுக்கை விரிப்பு

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு தலையணை மற்றும் படுக்கை விரிப்புகள் போன்றவற்றை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகியிடம் வழங்கியுள்ளது.

முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் வசதி கருதி மேற்படி பொருள்களை தந்து உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் முதியோர் இல்ல அத்தியட்சகர் விடுத்த கோரிக்கையை அடுத்து இவை வழங்கப்பட்டுள்ளன. (203-224)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

பிறப்பு 04 . 11 . 1947



இறப்பு 06 . 05 . 2009

**திருமதி சின்னத்தம்பி ஜெகதாம்பிகை**

அம்மா!
பாசமழையினில் எமை வளர்த்தாயே!... இன்று
பாசக் கயிற்றில் வீழ்ந்து விட்டாயே
ஆருயிர்த் தெய்வமே ஆறாது எம்துயர்
ஆனாலும் ஆறுகின்றோம் நீ
ஆண்டவனுடன் கலந்து விட்டாயென
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் நினைவுடன்: பிள்ளைகள்.
மூத்த விநாயகர் கோவிலடி, கரணவாய், கரவெட்டி.
(85884)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
முருகுப்பிள்ளை விக்ரர் அரியரத்தினம்

அன்னை மடியில் 12.06.1927
ஆண்டவன் மடியில் 05.06.2007

அன்பின் சிகரமாய், பாசத்தின்
ஒளியாய் வாழ்விற்கு வழிகாட்டியாய்
இருந்த எமது குடும்ப விளக்கே!
ஆண்டுகள் பல சென்றாலும்
மாறாது உங்கள் பிரிவுத்துயர்
மறையாது உங்கள் நினைவு

[illegible] வீதி,
பருத்தித்துறை.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி மாணவர்களுக்கு சீருடைகள் விநியோகம்

சண்டிலிப்பாய், ஜூன் 5

வலிகாமம் பனை,தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத் தணி 6இலட்சத்து50ஆயிரம் ரூபா பெறு மதியான சீருடைத் துணிகளை முன்பள்ளி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கியுள்ளது.

ஏழு பனை, தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்ட இக் கொத்தணியின் நிர்வாகத்தின் கீழ் 71 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

இவற்றில் ஆயிரத்து710 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 127 ஆசிரியர்கள் பணி யாற்றுகிறார்கள்.

இவற்றைவிட மாணவர்களுக்குப் போஷாக்கு உணவும் வழங்கப்படுகிறது.

வருடா வருடம் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சீருடை வழங்கப்படு வது குறிப்பிடத்தக்கது. (203-115)

## இணுவில் இந்துவுக்கு புதிய அதிபர்

சண்டிலிப்பாய், ஜூன் 5

இணுவில் இந்துக்கல்லூரி அதிபராக சிவசாமி கிருபாகரன் கல்வித் திணைக் களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 27ஆம் திகதி அதிபர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் வலிகாமம் கல்வி வலயத்தில் கணித பாடத்திற்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றியவர் என் பது குறிப் பிடத்தக்கது. (203-115)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு வாகனம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொழும்பில இருந்து வாகனம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் கொண்டு வரப்படும் மருந்துப் பொருள்கள் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர்கள் போன்றவற்றை ஏற்றி இறக்க வசதியாக இந்த வாகனம் எடுத்து வரப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள்கள் மற்றும் இதர பொருள்களைக் கொண்டு செல்லக் கூடிய பெரிய அளவிலான வாகன வசதிகள் வைத் தியசாலையில் இல்லை எனவும் வைத் தியசாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டி யுள்ளன. (203-224)

## கருத்தரங்கு

மண்டுவில், ஜூன் 5

அமெரிக்கன் இலங்கை மிஷன் யாழ். பிராந்திய சமயக்குழு ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை9மணிக்கு மானிப்பாய் திருச்சபை யில் கருத்தரங்கு ஒன்றை நடத் தவுள்ளது.

ஞாயிறு பாடசாலை பொதுப் பாடத் திட்டம்,பிள்ளைகள் விழா, விடுமுறை வேதாகமப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதில் கலந்துரை யாடப் படவுள்ளது. (203-59)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

கசிப்பு வைத்திருந்த நபரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றில் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் நடத்திய திடீர்ப் பரிசோதனையின்போது கசிப்பு வைத்தி ருந்த நபரைக் கைதுசெய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த நீதிவான் இந்நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (203-207)

## கோதுமைமா,சீனி விலைகள் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 5

குடாநாட்டில் கோதுமை மா,சீனி ஆகிய வற்றின் விலைகள் உயர்ந்து செல்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களில் கோதுமை மா,சீனி ஆகியவற்றுக்குத் தட் டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் மா 95 ரூபா முதல் 100 ரூபா வரையும் சீனி 98 ரூபா முதல் 120ரூபா வரையும் தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மா, சீனி போன்ற பொருள்களின் விலை கள் அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (203 -68)

### தனியார் போக்குவரத்துச் சேவையில்

## பயணச்சீட்டுகள் இன்றி பயணித்தால் நடத்துனருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.மாவட்ட தனியார் பஸ்களில் பயணிகள் பயணச்சீட்டு இல்லாது பய ணம் செய்வது கண்டு பிடிக்கப்பட்டால் குறித்த பஸ் நடத்துனருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமை யாளர் சங்கங்களின் தலைவர் பொ.கங்கா தரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:

யாழ்.மாவட்ட தனியார் பஸ்களில் பய ணச் சீட்டு கடந்த முதலாம் திகதியிலி ருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகள் எதிர் நோக்கும் அசௌகரி யங்களை கருத்திற்கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தீர்மா னத்துக்கமைய பயணச் சீட்டு முறை யாழ். மாவட்டத்திலும் அமுல்படுத்தப்பட்டுள் ளது.

தனியார் பஸ்களில் பயணச்சீட்டு பரி சோதிப்பதற்காக எமது சங்கத்தால் இரண்டு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பரிசோதனையின் போது பயணச்சீட்டு இல்லாது பயணிகள் பயணம் செய்வது கண்டு பிடிக்கப்பட்டால் குறித்த பஸ்ஸின் நடத்துனருக்கு முதல் தடவையாக 500 ரூபா அபராதமும், இரண்டாவது தடவை யாக 750 ரூபா அபராதமும், மூன்றாவது தடவையாக ஆயிரம் ரூபா அபராதமும், நான் காவது தடவையும் அவ்வாறான தவறு இழைக்கப்பட்டால் குறித்த பஸ்ஸின் நடத்துனருக்கு சங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை பறிமுதல் செய்யப் பட்டு சேவையிலிருந்து நீக்கப்படுவார் என்று கூறப்பட்டது.

இதே வேளை - பஸ்களில் பயணச் சீட்டுப் பரிசோதனை செய்வதற்காக பொலிஸாரும் நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (9-236)

## அதிபர் சேவை பதவி நிலை தொடர்பான சுயவிவரம் மீண்டும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில்

அச்சுவேலி, ஜூன் 5

இலங்கை அதிபர் சேவையில் உள்ள வர்களின் பதவி நிலை தொடர்பான சுய விவரங்கள் கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் மீண்டும் வெளியிடப்பட்டுள் ளன.

முதல் தடவை வெளியிடப்பட்ட விவ ரங்கள் திருத்தம் செய்யப்பட்டு இரண்டா வது தடவையாக வெளியிடப்பட்டுள்ள அதிபர் சேவையில் உள்ளோர் பட்டியலி லும் கணிசமான அளவு தவறுகள் காணப் படுவதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை அதிபர் சேவையில் உள்ள வர்களுக்கு சேவை மூப்பு, திறமை அடிப் படையில் பதவி உயர்வுகள் வழங்கப் படும் போது கல்வி அமைச்சில் கணனி மயப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாக வைத்தே பதவி உயர் வுகள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள தாக கூறப்படுகின்றது.

இணையத்தளத்தில் வெளியிடப்பட் டுள்ள பட்டியலை சம்பந்தப்பட்டவர்கள் ஒப்புநோக்கி தமது சேவை விவரம் தொடர் பான தவறுகளை உரிய முறையில் சரி செய்து பதிவுகளை மேற்கொள்ள வேண் டும்.

இல்லையேல் பதவி உயர்வு மேற் கொள்ளப்படும் போது சம்பந்தப்பட்டோர் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (203-11)

## தென்னிலங்கைக்கு புகையிலையை அனுப்ப பதிவுகளைச் சமாசத்தில் மேற்கொள்க

### சமாசத் தலைவர் விவசாயிகளுக்குத் தெரிவிப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 5

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை ஏ - 9 தரைப்பாதை வழி யாகத் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட வுள்ளது. புகையிலையை அனுப்ப விரும் பும் விவசாயிகளும், ஏனையோரும் யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேள னங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள் ளுமாறு சமாசத் தலைவர் தெரிவித்துள் ளார்.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம், இறால், நண்டு போன்ற கடலுணவு மற்றும் பனம் பொருள் உற்பத்திப் பொருள்கள் 125 லொறிகள் மூலம் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதனால் வெங்காயத்தின் விலை 30 ரூபாவிலிருந்து 60 ரூபா வரை அதிகரித் துள்ளது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை குடாநாட்டில் தேங்கிக் கிடப் பதாலும் இதற்கு தென்னிலங்கையில் நல்ல கிராக்கி இருப்பதாலும் உற்பத்தி யாளர்களின் நன்மை கருதி தற்பொழுது வெங்காயத்துடன் சேர்த்து புகையிலை களையும் அனுப்புவதற்கான ஒழுங்கு களைச் சமாசம் மேற்கொண்டுள்ளது.

தரைப்பாதை ஊடாகப் புகையிலையை அனுப்ப விரும்புவோர் சமாசத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள் ளுமாறு சமாசத் தலைவர் தெரிவித்துள் ளார். (203-115)

## இடம் பெயர்ந்தோருக்கு விவசாய சம்மேளனம் உதவி

சண்டிலிப்பாய், ஜூன் 5

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசம்,வன்னியிலி ருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் முகமாக மூன்று இலட்சம் ரூபா பெறுமதி யான உணவுப் பொருள்களை வழங்க முன் வந்துள்ளது.

மேற்படி சமாசத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த உணவுப்பொருள்கள் சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச் சர் டக்கஸ் தேவானந்தா ஊடாக அகதிக ளுக்குக் கையளிக்கப்படவிருப்பதாக சமா சத்தலைவர் தெரிவித்துள்ளார். (203-115)

## தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. நிதி சேகரிப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 5

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டு றவுச் சங்கம் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உதவும் நோக் குடன் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டு வலி.வடக்கி லிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலை யங்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தங்கியிருக்கும் மக்களிடமிருந்து நிதி சேகரிக்கப்பட்டு வருகின்றது.

தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் சங்கங்களுக்கு நிவாரணம் எடுக்கச் செல்லும் மக்களிடம் இந்த நிதி சேகரிக்கப்படுகின்றது.

ஒரு குடும்பத்திற்கு நூறு ரூபா வீதம் வழங்கும்படி முகாமையாளர் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாடு குறித்து மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் கூறப்படு கின்றது. (203-115)

## பிள்ளைகள் விழா

மண்டுவில், ஜூன் 5

அமெரிக்கன் இலங்கை மிசன் யாழ். பிராந்திய சமயக் குழுவினரால் இந்த வரு டத்துக்கான ''பிள்ளைகள் விழா'' கொண் டாடப்படவுள்ளது.

ஓகஸ்ட் 22ஆம் திகதி நவாலி திருச் சபையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வை முன்னிட்டு பல்வேறு வகை யான போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.

முதலாம் சுற்றுப்போட்டி ஓகஸ்ட் 15ஆம் திகதி மானிப்பாய் திருச்சபையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

''கிறிஸ்துவின் பலனால் எல்லாவற் றையும் செய்வேன்'' என்ற தலைப்பின் கீழ் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

குழுப்பாடல், தனிப்பாடல், திரும றைப் புதிர்ப்போட்டி, மனைவசனப் போட்டி, கட்டுரை, சித்திரம், கண்காட்சிப் போட்டி ஆகிய போட்டிகளே நடத்தப்படவுள்ள தாக சமயக் கல்விக் குழுவினரால் அறி விககப்பட்டுள்ளது. (203-59)






சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு வார இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நடை பெற்றது.

வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வாசகர்களுடன் பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜசிங்கம் மற்றும் நூலக உத்தியோகத்தர்களையும் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாவடி திருவருள்மிகு ஸ்ரீ அம்பல
# நவகுண்ட பகஷ புனராவர்த்
## மகா கும்பாபிஷேக சி

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



முருகன் அடியார்களுக்கு,

தாவடிப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அம்பல வாண முருகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறு வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். கலியுக வரதனாம் முருகப் பெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு நீண்ட கால மாக எழுந்தருளியுள்ளார். இவருக்கு நடைபெறும் கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுவதாகும். முருக வழிபாடு இம் மைக்கும், மறுமைக்கும் புண்ணியத்தைத் தருவதாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனை வழிபாடு செய்து முத்தி இன்பம் பெறஇயலும். இதனாலேயே நம் சமயத்தில் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் 'என்றும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் எமக்கு அறிவுறுத்தப்படுகிறது. கும்பாபிஷே கத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

### ஆலய பரிபாலனசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



வசந்தருது; இளவேனிற் காலம்; வைகாசி மாதம்.

மரம், செடி, கொடிகள் பூக்கும் இந்தச் சமயத்தில் நம் வாழ்வில் மகிழ்ச்சி பூத்திடத் தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயிலின் நவகுண்ட புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழ்வது நம் அனைவரின் பூர்வபுண்ணியப்பேறே.

சிதிலமடைந்து, பற்றைக் காடுகள் அடர்ந்தும் நாளாந்த பூசையோ, தீப ஒளியோ காணாதும், காணி கவர்வோர்களின் குடியேற்றமும் ஏற்பட்டிருந்த இவ்வாலயம் அடியார்களின் ஆர்வத்தினாலும், ஆக்கத்தினாலும், உற்சாகத்தினாலும், ஊக்கத்தினாலும் புனராவர்த்தனத் திருப்பணிகள் கண்டு மஹா கும்பாபிஷேகம் 1991 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. நான்கு வேளை நித்திய பூசையும், கந்த சஷ்டி, திருக்கார்த்திகை மற்றும் சைவக் கோயில்களுக்கே உரிய நைமித்திய விழாக்கள் மட்டுமன்றி 1992 ஆம் ஆண்டிலிருந்து சைவாகம விதிப்படி மஹோற்சவமும் நிகழ்ந்து வருவதுடன் ஆலயமும், சூழலும் பல வகையில் வளர்ச்சி கண்டும் இவற்றின் கட்டமைப்பில் கவின் தரு மாற்றங்கள் பல கொண்டும் விளங்குவதுடன் இன்று அடுத்த மஹா கும்பாபிஷேகமும் நிகழ்கிறதென்றால் தன்னிகர் இன்றி மேலாய் தற்பர ஒளியாய் யாரும் உன்னரும் பரமாய் நின்ற ஒருவனேயன்றி வேறெவரால் ஆகும். பக்தர் தம் மனம் குளிர வரம் அளிக்கும் கந்தன் குளிரக் குளிர அபிஷேகம் கொள்வதில் குதூகலம் கொள்பவன் இன்று மஹா கும்பாபிஷேகம் கொள்கிறான்.

நாம் இந்தப் பணியில் துணிய வைத்தது - அருணகிரிநாதர்.

''சூரில் கிரியில் கதிர் வேல் எறிந்தவன் தொண்டர் குழாம் சாரில் கதியின்றி வேறிலை காண்'' என்று அறுதிஇட்டு அருளிய வாக்கேயாம். அடியார் உறவும், அரன் பூசை நேசமும் அன்புமின்றி வேறு எதனாலும் இதைச் சாதிக்கவே முடியாது. இன்னும் பணிகள் பல காத்திருக்கின்றன. திருப்பணியின் சிறப்புக்கும், மஹா கும்பாபிஷேகத்தின் அருட் பிரவாகத்திற்கும் செந்தண்மை பூண்டொழுகும் சிவாச்சாரியார்களுக்கும் தாராள உளம் படைத்த அன்பர்களுக்கும், தங்கள் காரியம் போல் சலியாது, தளராது ஆர்வத்துடன் செயலாற்றிய பல் துறைசார் பணியாளர்கட்கும், தோளோடு தோள் துணை நின்ற பரிபாலன சபையினருக்கும் கந்தப் பெருமானின் அருட் கடாட்சம் நிலைத்திருக்க வேண்டுகிறேன்.

சிவக்கொழுந்து சுப்பிரமணியம், ஆலய பரிபாலனசபைத் தலைவர்.

### வலி.தெற்கு பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி ஆலயம் இற்றைக்கு இரு நூறாண்டு காலமாகத் தாவடி வாழ் மக்களிற்கு மாத்திரமன்றி அனைத்து மக்களிற்கும் சுபீட்சமான வாழ்வை வழங்க அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஒரு பழம் பெருமை வாய்ந்த ஆலயமாகும்.

இக் கந்தன் ஆலயம் இன்று புதுப் பொலிவு பெற்று மஹா கும் பாபிஷேகம் நிகழ்வது முருகப் பெருமானின் அருளை அடியவர்கள் மேன்மேலும் பெற்று இவ் வையகத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

''திருக்கோயிலில்லாத திருவிலூரும் ..... பாங்கினொடு
பல தளிகள் இல்லா ஊரும் உரல்ல அடவிகாடே''

''ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இருக்கின்றாரே''

என்று திருநாவுக்கரசர் தனது பாடல்களில் கோயிலையும் கோயில் வழிபாட்டையும் எவ்வாறு ஆன்மாக்களுக்கு முக்கியமானது என எடுத்துக் கூறியுள்ளார்.

ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயிக்கும் இடம் எனப்படுகிறது. இத்தகைய தகைமை களை எல்லாம் கொண்ட தாவடிக் கந்தன் வள்ளி, தெய்வானை சமேதராக வேண்டு வோர்க்கு வேண்டும் வரம் நல்க சைவமும், தமிழும் அறநெறியும் தழைத்தோங்கும் சான் றோர் வாழும் தாவடிப் பதியிலிருந்து பல்லாண்டு காலம் அருள்பாலிக்க ஆசி கூறுகின்றேன்.

திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச செயலாளர், வலி.தெற்கு, உடுவில்.

### ஆசிச் செய்தி



சகல செல்வமும் பொலிந்து விளங்கும் யாழ்.மாநகரின் கண்ணே தாவடி என்னும் புண்ணிய தலத்தில் இற்றைக்கு இருநூறாண்டு காலமாக அருள் புரிந்துவரும் விண்ணோர் சிறைமீட்ட கந்தன் கலியுகத்தின் கண்கண்ட தமிழ் தெய்வ மாக விளங்கும் அம்பலவாண கந்தசுவாமி பெருமானுக்கு ஊர் மக்கள் ஒன்று கூடிப் புனராவர்த்தன நவகுண்டபஷ கும்பாபிஷேகம் இன்று(05.06.2009) வெள்ளிக்கிழமை சுவாதி நட்ஷத்திரம் மிதுனலக்கின சுப முகூர்த்தத்தில் குருவருளும், திருவருளும் கைகூட நவகுண்ட மூர்த்தியர்களான சிவாச்சாரியப் பெருமக்களின் இறைபணி யுடன் மஹா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்தி வைத்தேன்.

கும்பாபிஷேகம் கண்ட அடியார்களுக்கும் எண்ணைக்காப்புச் சாத்தி இறைவனை மகிழ்வித்த- பக்தர்களுக்கும் கும்பாபிஷேகத்தில் சரியைத் தொண்டு ஆற்றியவர்களுக்கும், பரிபாலன சபையினருக்கும், இளம் தொண்டர் சபையின ருக்கும், கிராம மக்கள் அனைவருக்கும் எனது அருளாசிகள் உரித்தாகுக. நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைத்து மும்மாரி பொழிந்து மக்கள் மன நிம்மதியோடு வாழ அம்பலவாண கந்தப்பெருமானை வேண்டி ஆசி கூறி அமைகின்றேன்.

''அம்பலவாண கந்தன் பாதம் தொழ எண்ணிய கருமம் நிறைவேறும்''

பிரம்மஸ்ரீ தாணு-வாசு தேவ சிவாச்சாரியார்,
கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு (ஆலயகுரு),
சபரிமலை குருசுவாமி,
உரும்பிராய் சிவதர்ம சாஸ்தா ஆலய ஸ்த்தானீகர்.

### வணிகபீடப் பீடாதிபதியின் வாழ்த்துரை



திருவருள் மிகு அம்பலவாண கந்தசுவாமி திருக் கோயில் மஹா கும்பாபிஷேகம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். சைவமும், தமிழும் செழித்து வளரும் தாவடிப்பதி சமய வாழ்விற்கும், ஒழுக்கத்திற்கும் புகழ்பெற்றதாகும். அத்தகைய நம்மூரின் பெருமைக்கும், வரலாற்றுச் சிறப்பிற்கும் அடிநாதமாக விளங்குவது எமது முருகன் ஆலயமாகும். எமது குல தெய்வமான முருகப்பெருமான் அருளாட்சி செய்யும் இவ்வாலயம் எம்மூர் மக்களின் அயராத முயற்சியினால் ஆண்டு தோறும் புதுபடப் பொலிவு பெற்று வருகின்றது. இந்த ஆண்டு நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் ஆலயத்தில் பல அபிவிருத்தி வேலைகள் இடம் பெற்ற பின்னர் மேற்கொள்ளப்படுவதனால் ஆலயத்தின் வளர்ச்சியில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்படக்கூடிய நிகழ்வாக இக் கும்பாபிஷேகத்தை நான் பார்க்கின்றேன்.

முருகமூர்த்தி கோயிலென நாம் அன்பாக அழைக்கும் இவ்வாலயம் எம்மூர் மக்களின் வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்ததாகும். மூன்று தசாப்தங்களின் முன்னர் அழிவடைந்த நிலையிலிருந்த இவ்வாலயம் தனியார் கையிலிருந்து பொது மக்களின் கைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அதுவரை சிதைவடைந்த நிலையிலிருந்த இவ்வாலயத்திற்குப் பலர் பயம் காரணமாக வழிபாட்டுக்குச் செல்வதில்லை. இந்நிலையில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் வேலைகளில் பொது மக்களது ஈடுபாட்டுக்கான உறுதி நிலை ஏற்பட்டு ஆலயம் புனரமைப்புச் செய்யப்பெற்று புதுப்பொலிவு பெற்றது. அன்றிலிருந்து ஆலயம் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கியமை கண்கூடாகும்.

இன்று நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் வரலாற்றுப் பெருமை கொண்டதாகும். ஆலய நிர்வாகத்தினர் பல அபிவிருத்தி வேலைகளை ஆலயத்தின் உட்புறத்திலும் வெளியிலும் மேற்கொண்டுள்ளனர். ஆலயத்தின் புனருத்தாரணத்துக்குத் தேவையான நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி என்பவற்றைப் பெறுவதில் ஆலய நிர்வாக சபையினர் காட்டிவந்த அக்கறை பாராட்டப்பட வேண்டியதாகும். ஆலயத்தின் மணிமண்டபம், வசந்த மண்டபம் என்பன புதுப்பொலிவூட்டப்பட்டிருப்பதுடன் ஆலய வெளிமண்டபமும் மிகச் சிறப்பாக உருவாக்கப் பெற்றிருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும். இத்துடன் இணைந்ததாகவே விநாயகப் பெருமானுக்கும் சித்திரத் தேர் ஒன்று உருவாக்கப் பெற்றுள்ளது. அன்னதான மண்டப கட்டுமான வேலைகள் நடைபெறுகின்றன. அவை பரிபாலன சபையினரின் ஆளுமையினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற எம்மூர் மக்களின் உதவியுடன் நடைபெற இருக்கும் மஹா கும்பாபிஷேகமானது மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானது அருளாசியை வேண்டுவதுடன் எதிர்காலத்தில் ஆலயம் மேலும் புதுப்பொலிவு கண்டு சிறப்புடன் திகழ முருகப் பெருமானது பாதங்களை இறைஞ்சி நிற்கின்றோம்.

க.தேவராஜா, பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள்,
வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.



### ஆலய பரிபாலனசபை



தாவடியூர் மக்கள் பரந்து வி
திருந்த வானம் பார்த்த பூமி
கூடிக் கொத்தி தம் தொழுவத்து
இட்டுக் களை நீக்கி பண்பட்ட நில
பயிரிட்டுத் தம் வளம் பெருக்கி
தீதது நீக்கியும் நல்லது வாங்கி
பண்பட்ட உள்ளத்தினராய் மி
தனர். தோட்ட வேலையோ அன்றி ஆலய தரிசன
இல்லாத பொழுதையும் தவப்பொழுதாகத்த
கழித்தார்கள்.

முருகனுக்குத் தாவடியூரில் ஓர் கோயில் அமைத்
விழைந்தார் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்
அங்கு வாழ்ந்திருந்த பெரியார் குமாரவேலர் பெரியத
என்பார்.

ஆண்டு பலவாகத் தாவடி மக்களின் உள்ளங்களில் குடி இருந்து வந்த முருகன் தாவடியூர் வந்து தேடி இங்ஙனே வாழ்ந்திருந்து பிரத்தியட்சமாகத் தரிசனம் கொடுக்கச் சித்தமானான். அக்கோயில் குடிகொண்ட மூலமூர்த்தி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி என்னும் நாமத்தை ஏற்றுக்கொண்டார்.

மூலவர் பெயருடன் முன்னிற்பது தில்லைக்கூத் தனின் பெயர் என்பதும் இவற்றிற்குப் பொறுப்பான பெரியாரின் மேதா விலாசம்


நவீன
ஆபரண
பெ
சிற
ந
1/3,
தொ.


## விழா சிறப்புற வாழ்த்துவோர்


ஸ்ரீ முருகன்
வெதுப்பகம்
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

கண்ணன்
ஸ்ரோர்ஸ்
தொ.பே: 0778448558
சுதுமலை வீதி,
தாவடி.

ரீவி, டெக், றேடியோ,
கைக்கடிகாரங்கள், சுவர்
மணிக்கூடுகள் ஓடியே, வீடியோ
கசற் வகைகள் அன்ரனாக்கள்,
அன்பளிப்புப்பொருள்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
யாழ்ரன் மல்ரி சென்ரர்
48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜிப்ஸ்
வீடியோ படப்பிடிப்பாளர்கள்
தலைமை அலுவலகம்
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்
தொ.பே: 021 2225235
கிளை:
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
தொ.பே:0776030760,
0776098007.

பிள்ளையார் மாபிள்ஸ்
றெறாசோ வேக்ஸ்
25 வருட நிபுணத்துவம்
பெற்றவர்கள்
உரிமையாளர்: டி.தர்மராஜா
தொ.பே: 0776053147,
0776923730.
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, தாவடி.

சுயி
இரும்புத் தொழிலகம்
உரிமையாளர் : க.மனோகரன்
மானிப்பாய் வீதி
மானிப்பாய்.

சிவாஸ்
ஐஸ்கிறீம்
29 ஆண்டு கால பழமை
வாய்ந்த தரமான நிறுவனம்
உரிமையாளர்: G.S.சிவரூபன்
தாவடி வடக்கு,
கொக்குவில்.

சிறீ கபிலா
ஸ்ரோர்ஸ்
சுதுமலை வீதி,
தாவடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாண கந்தசுவாமி திருக்கோயில்
# ன அஷ்ட பந்தன பிரதிஷ்டா
## றப்பு மலர் 05.06.2009





## ஆலய வரலாறு

பெரும்பாலும் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டு வாழ்ந்து தாவடியூருக்குப் பெருமை சேர்த்தவர்கள் அவ்வூர்ப் பெருமக்கள். அவர்கள் ஆன்மவியல் ஒழுக்கத்திலும், வாழ்வியல் வளத்திலும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தனர்.

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர் முருகனுக்குத் தாவடியூரில் ஓர் கோயில் அமைத்திட அங்கு வாழ்ந்திருந்த வேளாண்மைச் சீலர்களில் ஒருவரான பெரியார் குமாரவேலர் பெரியதம்பி விழைந்தார்.

பெரியார் குமாரவேலர் பெரியதம்பி தமக்குச் சொந்தமான காணியில் மயில் நடத்தும் குகன் கை வேல் மூலவராகக் கொண்டதொரு கோயிலை அமைத்தார். அக் கோயிலில் குடி கொண்ட மூல மூர்த்தி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி என்னும் நாமத்தை ஏற்றுக் கொண்டார்.

மூலவருக்கு ஆகம விதிப்படி அமைக்கப்பெற்ற யந்திரம் தரிசனயந்திரமாக அமைந்துள்ளமை சிறப்பு அம்சமொன்றாகும். வெளியே பார்வையில் படக் கூடியதாக இது அமைந்துள்ளதால் திருமஞ்சனத்தின் போதும், மந்திர உச்சாடனத்தின் போதும், இறைவனுக்கு மலர் சாத்தி, தூப, தீபம் காட்டப்படும் போதும் இத் தரிசன யந்திரத்துக்கும் அவற்றினால் நேரடித் தொடர்பு ஏற்படுகிறது.

பெரியார் குமார வேலர் பெரியதம்பி இறைபதம் எய்தியதை அடுத்து, அவரது மகளின் கணவர் பரமானந்தர் ஆறுமுகத்திடம் சென்ற கோயிலின் பராமரிப்பு உரிமை, பின்னர் அவரால் தமது மகன் ஆறுமுகம் கார்த்திகேசரிடம் 1863 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டது.

இங்ஙனம் 33 வருடகாலம் ஆலயத்தைப் பராமரித்து தமது சொந்தப் பொருள்கொண்டு ஆலயத்தைப் பெருப்பித்துக் கட்டிய ஆறுமுகம் கார்த்திகேசர் தமது முதுமைப் பருவத்தில் ஆலய பராமரிப்புத் தத்துவ உறுதியொன்றை 1903 ஆம் ஆண்டில் முடித்திருந்தார். தமக்குப் பின்னர் உரிய தத்துவக்காரர்கள் கோயிலின் நிர்வாகத்தை மேற்கொள்வர் எனவும் ஆலயத்தின் அசைவற்ற, அசைவுள்ள ஆதனங்கள் குறித்தும் அவ் உறுதியில் தெளிவுபட விளக்கப்பட்டிருந்தது.

ஆறுமுகம் கார்த்திகேசர் இறையடி சேர ஆலயத்தின் நிர்வாகியாகக் கார்த்திகேசர் ஆறுமுகம் நிலைபெற்றார். கார்த்திகேசர் ஆறுமுகம் இறையடி சேர்ந்ததன் பின் அவரது மகனான ஆறுமுகம் சிவஞானம் சிறு பிள்ளையாயிருந்த காரணத்தால் கார்த்திகேசு ஆறுமுகத்தின் சகோதரியும் அவரது கணவரும் ஆலயத்தின் பராமரிப்பை ஏற்று நடத்தினர். ஆயினும் ஆறுமுகம் சிவஞானமே இக் கோயிலின் பராமரிப்புத் தத்துவம் உடையவரென யாழ்.மாவட்ட நீதிபதி 1957 ஆம் ஆண்டில் தீர்ப்பு வழங்கியதையடுத்து ஆறுமுகம் சிவஞானம் அவ் வேளையிலிருந்து கோயிலின் நிர்வாகத்தை மேற்கொண்டு வந்தார்.

1983 ஆம் ஆண்டுக் காலகட்டத்தினால் தமது பராமரிப்பு உரித்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில் ஒரு சபையை அமைத்து ஆலய பரிபாலனத்தை மேற்கொள்ள ஆறுமுகம் சிவஞானம் அங்கீகாரம் வழங்கினார்.

அதன்படி 1986 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் வழிபடுவோர் சபையையும், அதனை நெறிப்படுத்தவென நெறிப்படுத்துவோர் சபையையும் அமைக்கும் யாப்பு வரையப்பட்டு கிராம மக்கள் அனைவரதும் பிரசன்னத்தில் ஆறுமுகம் சிவஞானத்தின் ஒப்புதலுடன் சபை அமைக்கப்பட்டது.

இதனால் கிராம மக்கள் உற்சாகம் பெற்று அவர்களது ஆதரவுடன் ஆலய வழிபடுவோர் சபை முன்னின்று மேற்கொண்ட அரும் முயற்சியின் பலனாக 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி புனரமைக்கப்பட்ட ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவெய்தியது.

அன்றுமுதல்-படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்த ஆலயத்தில் இன்று நவகுண்டபஷ புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் காணத் திருவருள் பாலித்துள்ளது.

## செயலாளரின் பின்நோக்கு

புலப்படுகிறது. தரிசன யந்திரமும் அம்பலவாணர் பெயரும் அப்பட்டமாக அவற்றின் தொன்மையையும் மகிமையையும் எடுத்துக்காட்டுகின்றன.

இதன்பின் ஆலயம் கண்ட வளர்ச்சியும் எம்மை எதிர்கொண்ட இடர்பாடுகள் அவையாவும் முருகன் கைவேலினால் விலக்கப் பெற்றதும் நிகழ்காலத்து நிகழ்வுகள் யாவரும் அறிந்தவை.

இன்று இவ்வாலயம் நவகுண்ட பஷ புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தைச் சந்திக்கும் வேளையில் எங்கள் முயற்சிகள் அனைத்துக்கும் அங்கீகாரம் தந்து இடர்பாடுகளை நாம் சந்தித்த வேளையிலும் எமக்குப் பக்கபலமாக நின்ற பெரியார் ஆறுமுகம் சிவஞானம் இன்று எம் மத்தியில் இல்லையே என்ற ஏக்கமும் எமக்குண்டு. அஞ்சுமுகம் தோன்றியபோது ஆறுமுகம் காட்டிய சிவஞானமது.

மாறமர் அட்டவை,
மறவேல் பெயர்பவை,
ஆறிரு தோளவை
ஆறுமுகம் விரித்தவை
நன்றமர் ஆயமொடு
ஒருங்குநின் அடியுறை
இன்று போல்
இயைகெனப் பரவுதும்
ஒன்றார்த் தேய்த்த
செல்வநின் தொழுதே!

அழகக்கோன்
பாலசிங்கம்
செயலாளர், ஆலய
பரிபாலன சபை.


ழகிய தங்க
ள 22 கரட்டில்
கொள்ளச்
ஸ்தாபனம்

ல்வி
யகம்

ரியார் வீதி,
பாணம்.
021 222 9441


## கந்தன் திருவருள் அனைவருக்கும் கிட்டட்டும்



சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் திருவூர்களில் ஒன்றான யாழ்ப்பாணம் தாவடியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமிப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகப் பெருவிழாவாகும்.

அம்பலவாணமூர்த்திக்கும் தாவடியூரிற்குமுள்ள ஒரு தனிச்சிறப்பாவது சிதம்பரம் அம்பலவாண மூர்த்தியின் தாவடிவாழ் சைவப் பெருமக்கள் அம்பலவாண வேதவிநாயகராகவும் அம்பலவாண கந்தசுவாமியாகவும் கொண்டே ஆதிமுதல் வழிபட்டு வருகின்றமையாகும். யாழ்ப்பாண மக்களின் சமயவாழ்வு கலாசாரம், பண்பாடு அனைத்தும் கந்தபுராணம் கலாசாரத்தை ஆணிவேராகக் கொண்டே வளர்ந்து வந்துள்ளது. அத்தகைய கந்தபுராணக் கந்தவேள் தாவடியில் அம்பலவாணக் கந்தனாக இன்று கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு எழுந்தருளுகிறான்.

இன்நாள் எமது நாட்டு மக்கள் வாழ்விலே அல்லல்கள், அவலங்கள், துயரங்கள் நீங்கவும் அனைத்து உள்ளங்களிலும் இல்லங்களிலும் உலகங்களிலும் நிரந்தரமான சாந்தியும் சமாதானமும் அன்பொளியும் அருளொளியும் நிலைபெறவும் எழுந்தருளும் பொன்னாளாக அமையவேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

திருவருள் பெருகவும் திருப்பணிகள் சிறக்கவும் மக்கள் நலம் பெற்றின்ப முறவும்

'வேத நாயகனே ஓலம் - விண்ணவர்த் தலைவா ஓலம்'
'ஞான நாயகனே ஓலம் நண்ணுதற் கரியாய் ஓலம்'
'யான் செய் பாதகமனைத்தும் தீர்க்கும் பராபரா ஓலம்'
'கண்ணுதற் கடவுள் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்'

என்று மனம் மொழி மெய் மூன்றினாலும் ஆழமான அன்புடன் பரிபூரணமான நம்பிக்கையுடனும் பவித்திரமான சரணாகதியுடனும் பரம்பொருளாகிய கந்தசுவாமியாரை பயபக்தியுடன் வழிபாடு செய்வோர்க்குக் கந்தனது கருணை பரிபூரணமாக நடைபெறும் திருக்கோயில்களில் கிடைக்கும். கும்பாபிஷேக விழாவினை 'பெரும் சாந்தி விழா' என்றே சம்பந்தப்பெருமான் சிறப்பித்தார்.

'கரும் சோலை சூழ்ந்த கபாலீச்சரமமர்ந்தான்
பெரும் சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்'

என்றவாறு திருக்கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேக விழாவானது நாட்டிற்கும் மக்கள் சமூகத்திற்கும் பெரும் சாந்தியும் சமாதானமும் தரவல்லது என்பதனை இவ்விழா உணர்த்துகின்றது.

'ஆறில்லா ஊர்க்கு அழகுபாழ் நீறில்லா நெற்றியும் பாழ் நெய்யில்லா உண்டியும் பாழ்பாழே' என்றவாறு முன்னோர்கள் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

சமய வாழ்வின் மூலமே எமது கலை,பண்பாடு, கலாசார மேம்பாடுகளைப் பாதுகாத்துப் பேணி வளர்க்கமுடியும். 'இந்துநாகரிகம்' பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கப்படுவதன் குறிக்கோளும் இதுவேயாகும்.

இத்தகைய மேம்பாடுகளை வளர்ப்பதில் இடையீடின்றி பாடுபட்டு வரும் நிர்வாக சபை உறுப்பினர்களும் பாராட்டத்தக்கவர்களாவர். இன்று சமய விழாக்கள் வளர்ந்து சென்றாலும் ஆன்மீகத்துறையில் நாட்டம் குறைந்து மனித நேயமும் மானிடத்தை நேசிக்கும் பண்பாடும் அருகிய சமுதாயமாக இளம் சந்ததியினர் பலர் மாறிவருவது கவலைக்குரிய விடயமாகும். இந்த வழியிலே சமய நிறுவனங்களுக்கும் பாரியபொறுப்புண்டு. பொறுப்புணர்ந்து செயற்படும் இந்து சமயத் திருக்கோயில்களும் நிறுவனங்களின் செயற்பாடுகளும் போற்றத்தக்கவையாகும்.

ஆலயத்திருப்பணிகளில் நிலவும் போட்டிகள் மனக்கசப்புகளைக் களைந்து பொதுப்பணிகளையாற்றும்போது பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் பங்கு இவை சான்ற மன ஒருமைப்பாட்டுடன் ஆலயங்களில் தொண்டு செய்யப்பழகுவது வேண்டத்தக்கது. ஆலயத் திருப்பணிகளாற்றுமிடத்து நிர்வாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளாமை பொது நலநோக்குடன் அனைவரும் திருக்கோயிற் தொண்டிலே தம்மை இணைத்துக்கொண்டு சமுதாயத்தில் சைவநீதி மீண்டும் நிலைபெறும் வண்ணம் அம்பலவாண கந்தசுவாமியார் திருவருள் புரிவாராக.

'எல்லாம் அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்க்கவே'

பேராசிரியர் கலைவாணி இராமநாதன்
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மலரமைப்பு:
ஆலய பரிபாலன சபையும்
ஆலய இளந்தொண்டர் சபையும்


சி.சிவன் கடை
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு.
தொ.பே: 2225900

பத்திரகாளி அம்மன்
ஸ்ரோர்ஸ்
இல.50,
பத்தான வீதி,
தாவடி.

சுன்னாகம்
ப.நோ.கூ.சங்கம் வ/து
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.
தொ.இல. 0602212380

அனைத்துப் புடவைகளின்
மொத்த, சில்லறை
வியாபாரிகள் உங்கள்
புடவைத் தெரிவுகளை
எண்ணம் போல் தெரிவு
செய்ய விஜயம் செய்யுங்கள்.
வளர்மதி
புடவையகம்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

லக்சுமி
ஸ்ரோர்ஸ்
சுதுமலை வீதி,
தாவடி.

அலங்காரப் பந்தல்,
முத்துச் சப்பறம்,
பறவைக் காவடிகள்
சேவை பெற்றிட
ஐயப்பா
பந்தல் சேவை
உரிமையாளர்: அ.இந்துதாஸ்
மானிப்பாய் வீதி, தாவடி.
தொ.பே: 0777440249

யாழ்.நகரில் முன்னணி
ஆசிரியர் குழாமின்
சேவை
நிரூ
ரியூசன் சென்ரர்
...ரேசன் வீதி,
கோண்டாவில்.

சிறிக்குமரன்
ஹாட்வெயர்ஸ்
கட்டடப்பொருள்கள்
விற்பனையாளர்கள்
அஸ்பெஸ்ரர் சீற், சீமெந்து, கம்பி
வகைகள் என்பவற்றை ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ள
இல.83, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222798


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trinity College And University

(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

**Jaffna Road, Manipay - T.P.No :- 060 - 221 - 6433** (மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

இன்று முதல் யாழ் மாவட்டத்தில் உத்தியோக பூர்வமாக தனது அனைத்து பட்டப் படிப்புக்களையும் ஆரம்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது.

*கீழ்வரும் பட்டப்படிப்புக்களுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.*

## Bachelors Degree :-

- **Bachelor of ICT (B.ICT)** ( Three Years + ICT Training)
- **Bachelor of Business IT (B.B.IT)** (Two Years +Training)
- **Bachelor of Business Management (BBM)** (Two Years +Training)
- **Bachelor of Commerce (B.Com)** (Two Years +Training)
- **Bachelor of International Business (B.IB)** (Two Years +Training)
- **Bachelor of Computer Science - B.Sc (Hons)** (Two Years +ICT Training)

## Masters Degree :-

- **Master of ICT (MICT)** (1 ½ Years + Project Training)
- **Master of Science (IT) (M.Sc in IT)** (1 ½ Years + Project Training)
- **Master of Commerce (M.Com)** (1 ½ Years + Project Training)



இன்று முதல் **June 12**ம் திகதி வரை உள்ள காலப் பகுதியில் பதிவு செய்வோருக்கு மட்டும் ரூபா. **20000** புலமைப்பரிசில் வழங்கப்படும் !!!

### Greeting Message From Sri Lankan Representative

It is with much pleasure I send this greetings on behalf of vice-chancellor of TCU Dr.A.Peel Bayley and me as the official Representative in Sri Lanka for TCU. We are really happy that as our coordinator Mr.S.Selvathashan is launching our degree programs there in the Jaffna District, and also hope that this will facilitate those who try their luck late but late than never.

Congratulations Mr.Selvathashan!
I am confident that your Mission will be a success!.

Dr.N.Kumaraguruparan,
Official Representative in Sri Lanka,
for Trinity College & University.



Please Contact :-
Mr.S.Selvathashan (M.Sc in IT - Final Year)
Coordinator (North),
Trinity College & University
Mobile - 0777 - 110862

- எமது இப் பட்டப்படிப்பு, அனைத்து வருட பரீட்சைகள் யாவும் எமது பல்கலைக்கழக உயர் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.
- யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பட்டப்படிப்புக்களை நிறைவு செய்த பின்னர், USA,UK,CANADA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் அல்லது கல்லூரிகளில் பட்டப்பின்படிப்பை தொடரமுடியும். இதற்கான Visa ஒழுங்குகள் யாவும் எமது பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரிவினால் மாணவர்களுக்கு செய்து தரப்படும்.
- பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் UK அரசின் அங்கீகாரம் உள்ள Association of Computer Professionals நிறுவனத்தில் நீங்கள் உறுப்பினராக இணைந்து உங்கள் கல்வித்தராதரத்தை சர்வதேச அங்கீகாரமுடைய தாக்கி கொள்ள முடியும்.

### எமது யாழ் மாவட்ட மாணவர் கருத்துக்கணிப்பில் எமது பல்கலைக்கழகம்



Miss. Swe y Arokiyanathan B.Sc(Hons)
inaicoddai,Jaffna)

நான் கடந்த இருவருடங்களாக கொழும்பில் உள்ள இப்பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பிரிவில் பட்டப்படிப்பை தொடர்ந்து கொண்டிருந்தவேளை, ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் எனது பட்டப்படிப்பினை தொடர முடியவில்லை. ஆனால் மீண்டும் UNI கணனி நிறுவனத்தில் எனது இறுதி வருடப்பட்டப்படிப்பில் இணைந்து எனது பட்டப்படிப்பினை நிறைவு செய்து தற்போது பட்டச்சான்றிதழை பெற்று பிரபல தனியார் பாடசாலை ஒன்றில் தகவல் தொழில் நுட்பத்துறை ஆசிரியையாக கடமையாற்றுவதுடன், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமுடைய இந்திய பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்பின்படிப்பை தொடருவதற்கும் ஆயத்தமாகவுள்ளேன். எனவே இப்பட்டப்படிப்பினை நிறைவு செய்து தந்தமைக்கு UNI கணனி நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.



Mr.M. Vithiyatharan (B.Sc -1st Year)
(Kayts,Jaffna)

நான் இப்பல்கலைக்கழக பட்டப்படிப்பு பிரிவில் இணைந்து தற்போது கணனி விஞ்ஞானத்துறையில் முதலாம் வருடப் பிரிவில் எனது பட்டப்படிப்பை கற்றுக் கொண்டிருக்கின்றேன். நான் யாழ் மாவட்டத்தில் இப்பல்கலைக்கழகத்தினுடைய பட்டப்படிப்பு பிரிவில் இணைந்தமைக்கு பின்வரும் காரணங்களை குறிப்பிட முடியும்.

- மிகக்குறைவான கட்டணம்.
- ஏனைய நிறுவனங்களில் உள்ள பட்டப் படிப்பில் ஸ்திரமற்ற தன்மை.
- இங்கு விரிவுரையாற்றும் விரிவுரையாளர்கள் அனைவரும் துறைசார்ந்த பட்டதாரிகள்.
- சிறந்த கணனி ஆய்வுகூட வசதி.
- வேலை செய்து கொண்டும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டும் இலகுவாக பட்டப்படிப்பை நிறைவு செய்ய முடியும்.

எனவே என்போன்ற மாணவர்கள் இப்பல்கலைக்கழக பட்டப்படிப்பு பிரிவில் இணைந்து உங்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### Trinity University Affiliations...

- Part Of The Educational Division Of The U.I.C - USA
- Registered with British (U.K) Education Department (As bonafide legal overseas qualifications by the UK education act of parliament - 1988)
- Registered with Correspondence Accreditation Association (CAA - V140PG330)
- Trinity does have a Accredation certificate JPA(L) 130/10/2-Klt.128. Recognized by UNESCO.
- Member of the United Interdenominationl Church


## எம்பிலியப்பிட்டியவில் சூடு; இருவர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 05

எம்பிலியப்பிட்டிய, செவனகல, கபுறுகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தையடுத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் பிரதேசவாசிகளினால் பிடித்துத் தாக்கிய பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதையடுத்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபரையும், காயமடைந்த இருவரையும் எம்பிலியப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான விசாரணைகளை எம்பிலியப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## புலமைப் பரிசில் பரீட்சை

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை - 3, நாளை சனிக்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறும்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் மேற்படி பயிற்சிப் பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதியினை முன்பு அறிவித்த நிலையங்களில்பெற்றுப்பரீட்சை நடத்தும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible]ன் அறிவித்துள்ளார்.

(1-59)


## 45ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 18 02 1949



ஆண்டவன் இணைப்பில் 22 04 2009

### திருமதி யோசப்மரியநாயகம் மேரி பிலோமினா (மலர்)

எங்கள் அன்புத் தெய்வமே! உங்களின் மறைவுச் செய்தி கேட்டு நாங்கள் அதிர்ச்சியும், கவலையுமடைந்தோம். எமது குடும்ப விளக்காக இருந்து எம்மை வழி நடத்தினீர்கள். எங்கள் துன்பங்களையெல்லாம் உங்கள் துன்பமாக ஏற்று பொறுமையுடன் எவ்வளவு துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்திருப்பீர்கள். இதனை நினைக்கும் போது இதயம் அழுகின்றது. உங்களின் பிரிவு உயிர் உள்ளவரை எம்உள்ளத்தை வாட்டிக் கொண்டேயிருக்கும். உங்களை இழந்து கரை காணா ஓடம்போல் தவித்துக் கலங்குகின்றோம். எங்களின் கண்ணீர்ப்பூக்களை உங்கள் திருப்பாதங்களில் சமர்ப்பித்து விண்ணக வாழ்விற்காக இறைவனை வேண்டுகின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு, அறிந்து எமக்கு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (05.06.2009) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தவசிகுளம் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கேற்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவசிகுளம்,
மிருசுவில். (85839) குடும்பத்தினர்.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்: [illegible]

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 06.04.1943

விண்ணில் 09.06.2006

### அமரர் சிவபாதம் சோதிலிங்கம்

திதி: பூர்வபக்க் திரயோதசி

ஆண்டுகள் மூன்று சென்றாலும் அப்பா! ஆறாது எம் துயரம்
அறிவின் சிகரமாய் பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் நன்னெறி தவறாது வாழ்ந்து
எமக்கு வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
மாத்தனைக் கந்தனை வேண்டுகின்றோம்.

விதானை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள்.

(85865)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் 4 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

அன்பு மாணவர்களே,
அடுத்த வருடம் 2010 இல் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குச் சிறந்த முறையில் தயார்படுத்தி, சிறந்த பெறுபேறைப் பெற ஆவன செய்வதே எமது முழு நோக்கம்.
வெள்ளி தோறும் வெளிவரவுள்ள இத்தொடர் குறிப்புக்களையும் உள்ளடக்கி வெளிவரும் என்பதை அறியத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

### பகுதி 11

நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்
100 புள்ளிகள்

100

**● எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

■ கீழ்வரும் பந்தியை நன்கு வாசித்து அதன்கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பல இன மக்கள் வாழும் இலங்கை ஒரு ஜனநாயக சோசலிஷக் குடியரசாகும். இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியின் பெயர் மஹிந்த ராஜபக்ஷ. இலங்கை நாட்டுக்குச் சொந்தமான பறவைகளும் விலங்குகளும்கூட உண்டு. இலங்கையின் தேசிய பறவை காட்டுக்கோழி. நாகமரம் இலங்கையின் தேசிய மரமாகும். இலங்கையில் பல நதிகள் இருப்பினும் மிகவும் நீளமான நதி மகாவலி கங்கை. மத்திய மலை நாட்டிலேயே தலதா மாளிகை உள்ளது. அதனைப் பார்ப்பதற்காக வெளிநாட்டவர்கள் பலரும் இலங்கைக்கு நாளாந்தம் வந்த வண்ணமே இருக்கின்றனர்.

1. இலங்கை ஜனாதிபதியின் பெயர் என்ன?

..................................................

2. இலங்கையின் மிக நீளமான நதியின் பெயரை எழுதுக

..................................................

3. இலங்கையின் தேசிய மரம் எது?

..................................................

4. தலதா மாளிகை நாட்டின் எந்தப் பகுதியில் அமைந்துள்ளது?

..................................................

5. இலங்கையில் வாழும் இனங்கள் எவை?

..................................................

6. எதிர்க் கருத்துச் சொல் தருக.

   1) நாடு ..................................................
   2) வெளிநாட்டவர் ..................................................

7. இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள நாட்டின் பெயரை எழுதுக

..................................................

(2 X 7 = 14 புள்ளிகள்)

■ மிஸ்னா பிரெளஸ், கண்டி 'ருக்மலீ' வித்தியாலயத்தில் கல்வி கற்கிறாள். பாடசாலைக்கு வரக்கூடிய பாதையை சீர்செய்வதற்கான சிரமதானமொன்றை ஏற்பாடு செய்ய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் எடுத்தது.
இதனைக் கருத்திற் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

8. சிரமதான விடயம் தொடர்பாக மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் பாடசாலையின் முன்பகுதியில் பதாதையொன்று இட வேண்டும். அதில் நீங்கள் எழுதுவதை கீழ்வரும் கீறிட்ட இடத்தில் எழுதுக.

..................................................

9. சிரமதானத்தை மேற்கொள்வதற்கு மிகவும் சிறந்த நாளாக எந்த நாளை நீர் கருதுகின்றீர்?

..................................................

10. சிரமதானத்தின் மூலம் செய்யக்கூடிய இரு விடயங்களை எழுதுக.

   1. ..................................................
   2. ..................................................

11. பாடசாலைக்கு அண்மையில் 'இது ஒரு பாடசாலை' என்பதைக் குறிக்கக் குறியீட்டுப் பலகை ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது. அதில் காணக் கூடியதை எழுதுக.

..................................................

12. இவ்வாறான சிரமதானத்தின் போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.

..................................................

13. சிரமதானத்தின் மூலம் ஏற்படக்கூடிய சிறந்ததொரு நன்மையை எழுதுக.

..................................................

14. பாடசாலைக்கு அண்மையில் தபாற்கந்தோர் ஒன்று அமைந்துள்ளது. அங்கு Post என்று எழுதப்பட்டுள்ளது. மிகுதியை ஆங்கிலத்தில் எழுதுக.

..................................................

15. சிரமதானத்தில் யார் யாருக்கு பங்குகொள்ள முடியும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

..................................................

(2 X 8 = 16 புள்ளிகள்)

**சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

16. இன்று 18 ஆம் திகதி புதன்கிழமை ஆயின், நேற்று முன்தினம் எத்தனையாம் திகதி, எந்த நாள்?

..................................................

17. ஒரு பூக்கூடையின் அரைப்பகுதியில் தாமரைப் பூக்கள் இருந்தன. பூக்களின் எண்ணிக்கை 24. ஏனையன ரோசா பூக்கள். பூஞ்சாடியிலிருந்த ரோசாப் பூக்களின் இருமடங்கு எத்தனை?

..................................................

18. என்னிடம் உள்ள பணத்திற்கு இன்னும் இரண்டு ரூபா நாணயங்கள் 20 இனைச் சேர்க்க முழுத்தொகை ரூபா. 100 ஆகும். என்னிடம் முதலில் எவ்வளவு பணம் இருந்தது?

..................................................

19. இயக்கிவிடும் போது பத்து நிமிடங்களுக்கு ஒருமுறை ஒலியெழுப்பும் மணியொன்று மூன்றாவது முறையாக ஒலியெழுப்பியது மு.ப. 10.10 இற்காகும். முதலில் எத்தனை மணிக்கு ஒலியெழுப்பியது?

..................................................

20. மேசையொன்றின் மேற்பகுதியின் நீளம், அகலத்தை விடவும் இரு மடங்காகும். அகலப் பகுதி 3 m ஆயின் மேசையின் சுற்றளவு எத்தனை m?

..................................................

(2 X 5 = 10 புள்ளிகள்)

**சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.**

21. தென்னை மரத்திலிருந்து பெற்றுக்கொள்ளாத பொருள்
   1. பாணி   2. கருப்பட்டி   3. வினாகிரி   4. சீனி

22. தங்கத்தைக் தரக் குறைவாக மாற்றுவதற்குப் பயன்படும் பொருள் எது?
   1. இரும்பு   2. ஈயம்   3. செம்பு   4. துத்தநாகம்

23. அரச மனைகளில் பெண்கள் தங்குவதற்காகத் தனியாக அமைந்த இடம்
   1. நிலா முற்றம்   2. முற்றம்   3. அந்தப்புரம்   4. உப்பரிகை

24. பொ(த்)த எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ் வடிவம்
   1. நூலகம்   2. இரண்டு   3. புத்தகம்   4. மாம்பழம்

25. நீரைச் சுத்திகரிக்க மிகவும் சிறந்த முறை,
   1. வடிகட்டுதல்.   2. சூடாக்குதல்.
   3. உப்புச் சேர்த்தல்.   4. குளோரின் சேர்த்தல்.

பிரபல்ய சிங்கள வெளி ... டனும் மேலதிக சேர்க்கையுடனும்
தயாரிக்கப்பட்ட ஒரு ... படைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஒரே தடவையில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
 1. பத்தாவதானி 2. சோடாசவதானி
 3. தசாவதானி 4. தசாவதானி

(2 X 6 = 12 புள்ளிகள்)

## சுருக்கமான விடை தருக.

27. இலங்கைக்கு எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது?

.............................................

28. தச்சுத் தொழிலுக்குப் பிரபலமான நகரம் எது?

.............................................

29. அரசாங்கக் கொண்டாட்டம் ஒன்றின்போது பாடப்படும் கீதம் எது?

.............................................

30. பெக்ஸ் எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவத்தை எழுதுக.

.............................................

31. ஆழிப் பேரலை ஏற்பட்ட ஆண்டு எது? ............................

## தமிழ்ப் பதங்களுக்குரிய ஆங்கிலப் பதங்களை எழுதுக.

32. பாடசாலை .............................. 33. மகள் ..............................

34. வருடம் .............................. 35. வீடு ..............................

36. கதவு .............................. 37. கடல் ..............................

38. இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?

.............................................

39. அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதியின் பெயரை எழுதுக.

.............................................

40. உலகின் முதலாவது பெண் பிரதமர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

.............................................

41. தொடர்பு சாதனங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.

.............................................

42. இலங்கையில் சாதாரண உள்நாட்டு தபாற்கட்டணம் யாது?

.............................................

43. மாணிக்கக்கல் அதிகமாக உள்ள இடம் எது?

.............................................

45. மாட்டு வண்டியொன்றின் சில்லொன்றின் சுற்றளவு 75 cm ஆயின், 60 m தூரம் மாட்டு வண்டி சென்றால் சில்லு எத்தனை தடவைகள் சுழலும்?

.............................................

46. வண்டியில் ஒரு தடவையில் 125 தேங்காய்களைக் கொண்டு செல்லலாம். அவ்வாறான 7 மாட்டு வண்டிகளில் எத்தனை தேங்காய்களைக் கொண்டு செல்லலாம்?

.............................................

47. 7 மாட்டு வண்டிகளிலுமிருந்த தேங்காய்களில் 325 காய்கள் விற்கப்பட்டன. 75 காய்கள் பழுதடைந்தவை. மீதியாக உள்ள நல்ல தேங்காய்கள் எத்தனை?

.............................................

■ அப்பா என்றும்போல் கொழும்புக்கான பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தார். அவர் முகத்தை நான் மிகவும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்... இதைத் தொடர்ந்து நடைபெற்றவற்றை (4 சொற்களுக்குக் குறையாத) 6 வாக்கியங்களில் எழுதுக. (48 - 53)

.............................................

.............................................

.............................................

.............................................

.............................................

.............................................

இதன் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 02 இன் பகுதி 01 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## வினாத்தாள் 1 இன் பகுதி 1 இற்கான விடைக் குறிப்புக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. (2) | 02. (3) | 03. (1) | 04. (3) | 05. (2) |
| 06. (5) | 07. (1) | 08. (2) | 09. (3) | 10. (6) |
| 11. (1) | 12. (1) | 13. (3) | 14. (4) | 15. (3) |
| 16. (1) | 17. (1) | 18. (1) | 19. (2) | 20. (2) |
| 21. 40 | 22. 29 | 23. 832 | 24. 305 | 25. 195 |
| 26. 5 | 27. .8 | 28. (2) | 29. (2) | 30. (1) |
| 31. 5 | 32. 5 | 33. 15 | 34. 30 | 35. 15 |
| 36. 4 | 37. 20 | 38. Mango | 39. Elephant | 40. School |

## சுடரின் ஆலோசனை

**எப்படிப் படிப்பது?**

தினமும் கற்ற விடயங்களை அன்றன்றே கற்றல், கற்ற பாடத்தில் அது தொடர்பான வினாக்களைச் செய்து பார்த்தல், சுற்றாடல் சார்ந்த விடயங்களை சூழலில் இனம் காணல், தொடர்ச்சியாக ஒரு பாடத்தைப் படிக்காமல் வேறு வேறு பாடங்களைப் படித்தல், ஓர் அலகில் போதியளவு பயிற்சிகளைச் செய்தல்.

தொகுப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் -
**இஸ்மாயில் எம். பைரூஸ்**
(கொழும்பு)

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035



அளவெட்டி வடக்கு பத்திரகாளி அம்பாள் ஆதி விரபத்திரர் ஆலயத் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் [illegible] சேர்ந்த இசைக்கலைஞன் கு.ஜெகதீசனின் இசை நிகழ்ச்சி இடம்பெறு வதைப் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி புவேந்தன் பாலர் பாடசாலை பகல் பராமரிப்பு நிலையத்தில் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற கைவிசேடம் வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் மேற்படி நிலைய மாணவனுக்கு கைவிசேஷம் வழங்கு வதைப் படத்தில் காணலாம். (படம்: மண்டுவில் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள்

சர்வதேச சுற்றுச் சூழல் தினம் ஜூன் 5 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுவது யாவரும் அறிந்த ஒன்றுதான்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டின் கீழ் இத்தினம் உலகெங்கும் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

இத்தினம் வெறுமனே சம்பிரதாய பூர்வமான விழாவாகக் கொண்டாடப்படும் நிகழ்வாகவே பெருமளவில் கடைப்பிடிக்கப்படுவது வருந்தத்தக்கது.

எமது பிரதேசங்களில் பாடசாலை மட்டத்தில் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலைச் சூழல் துப்புரவாக்குதல், மரம் நடுகை செய்தல் ஆகியன இடம் பெறுவது வழக்கமானது. ஏராளம் மரக்கன்றுகள் நடப்படுவதும் வழக்கமான ஒன்று.

ஆனால் ஏப்பிரல், ஓகஸ்ட் மாதங்களில் அருங்கோடைக் காலங்களில் வரும் பாடசாலை விடுமுறையின் போது மரங்கள் நீரூற்றிப் பராமரிக்கப்படுவது மிகக் குறைவாகவே இடம்பெறுகிறது. இதனால் நீரின் தேவை அதிகம் உணரப்படும் மரங்கள் அழிவுற்றுப் போகின்றன. மரம் நடுகைத் திட்டத்தின் பயனுறு தொடர்ச்சித் தன்மை கேள்விக்குரியதாகின்றது. ஆகவே இது தொடர்பில் நாம் பொருத்தப்பாடான, நடைமுறைச் சாத்தியமான கொள்கை ஒன்றைக் கடைப்பிடித்தல் அவசியமானது.

பாடசாலை மாணவர் மட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் வினைத்திறன் மிகு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் அவசியமானது. இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையானது சுற்றுச் சூழல் தொடர்பில் செயற்படும் அரச துறை நிறுவனமாக உள்ளது.

இந்நிறுவனமானது எமது நாட்டின் பாடசாலை மட்ட நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அக்கறை செலுத்தி வருகிறது. ஜூன் சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், மரம் நடுகைக்கென பலவித மரக்கன்றுகளையும் வழங்கி வருகிறது.

உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் பல மர நடுகைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இவை தொடர்பான செய்திகள், புகைப்படங்களை ஊடகங்கள் மூலமாகப் பார்க்க முடிகிறது.

நடப்படும் மரங்கள் யாவும் எமது பிரதேசத்தில் வளருமாயின் இன்று நாம் எங்கணும் பசுமையான சோலைகளைக் கண்டிருக்க முடியும். ஆனால் மரம் நடுகைத் திட்டத்தின் தொடர்ச்சியான தன்மை அதாவது பராமரித்தல் என்பது மிகப் பெரும்பாலும் நடைபெறுவதில்லை. மிகச் சொற்ப நாள்களே மரங்களின் பராமரிப்பு இடம் பெறும். ஏனைய நாள்களில் மரக்கூடுகள் விறகுத் தேவைகளுக்காக பிடுங்கப்படுவதும், மரங்களை ஆடு, மாடுகள் உணவாக உண்பதும் காணக் கூடியதாக



வுள்ளது. பொது இடங்களில் இடம்பெறும் மரம் நடுகைத் திட்டங்களே பெருமளவு இச் சீரழிவைக் காண்கின்றன.

ஆனால் தனிப்பட்ட மரங்களை வளவுகளில் நடுவதற்கென விநியோகிக்கப்படும் மரங்கள் பெரும்பாலும் நன்கு பராமரித்துச் செழித்து வளர்வதைக் காண முடிகிறது. பொதுஇடங்களில் நடப்படும் மரங்கள் தொடர்பில் நடைமுறைத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படுதல் அவசியமானது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் திட்டமொன்றை செயல்படுத்துவது தொடர்பில் கருத்திட்ட முன்மொழிவு (Project proposal) ஒன்றைச் சமர்ப்பித்து நிதியைப் பெறுகின்றன. திட்டம் ஆரம்பித்தவுடன் அத்திட்டம் தொடர்பான தொடர் விளைவைக் கண்காணிக்காதுவிடும் தன்மை பெருமளவில் காணப்படுகின்றது.

வளர்ந்த நாடுகளை நாம் கவனிப்போமாயின் அங்கு திட்டம் ஆரம்பிப்பதற்கு தயாரிக்கப்படும் அறிக்கை போன்று திட்ட மதிப்பீடு (Project Evaluation) அறிக்கையும் தயாரிக்கின்றார்கள். அதற்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இதனால் திட்டங்களின் தொடர் விளைவு கண்காணிக்கப்பட்டு அதன் பலம், பலவீனங்கள் ஆராயப்பட்டு புதிய திட்டங்களில் அவை உள்வாங்கப்படுகின்றன. இதனால் வளர்ந்த நாடுகள் மேலும் வளர்கின்றன.

எமது நாட்டிலும் நாம் மர நடுகை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு உட்பட பல திட்டங்கள் தொடர்பிலும் மேற்சொன்ன நடைமுறையைப் பின்பற்றுதல் அவசியமானது.

நாட்டின் முன்னேற்றம் கருதிய பயனுறு தன்மைக்குத் திட்ட நடைமுறைப் படுத்தல்களில் பொருத்தமான மீளாய்வு அவசியமானது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பில் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனை, கழிவுகளை சுகாதாரமற்ற முறையில் அகற்றுதல், நீர் வளப்பாதுகாப்பு, உரங்கள், கிருமிநாசினிகளின் பாவனை போன்ற விடயங்களிலும் கடும் போக்கான கொள்கைகளை அரச மட்டத்தில் பின்பற்றுதல் அவசியமாகும்.

ஒலி மாசடைதல் தொடர்பில் சட்டம் இருந்த போதிலும் எமது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இச் சட்டம் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை . இதனால் பாடசாலை மாணவரின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவது வருந்தத்தக்கது.எமது பிரதேச மர வளம் பெருமளவில் இழக்கப்பட்டு விட்டதனால் மரம் நடுகை, பராமரிப்பு தொடர்பில் உடனடிக் கவனம் செலுத்தப்படுவது இன்றைய அவசரத் தேவையாக உள்ளது.

நடப்படும் மரங்களின் உயிர் வாழ்தல் தன்மை உறுதி செய்து அதன் பயன்களை நாமும், எதிர்கால சந்ததியினரும் அனுபவிக்க வழி ஏற்படுத்தப்படுதல் காலத்தின் தேவையாக உள்ளது.

பாடசாலை மட்டத்தில் மாணவரை இது தொடர்பில் ஊக்கப்படுத்துவதுடன் வழிகாட்டியாகவும் திகழ வேண்டியது பொதுச் சமூகத்தின் கடமையுமாகும்.

**திருமதி.சற்குணேஸ்வரி தபேந்திரன்,**
**ஆசிரியை,**
**கைதடி குருசாமி வித்தியாசாலை**

## உயர்வுதரும் உள்ளத்தூய்மை

சிவானந்த லகரியில் ஆதி சங்கரர் பரமசிவனை 'ஸ்தேனானாம் பதயெ நம; தஸ்கரணாம்பதயெ நமஹ எனவும் ஸ்ரீருத்ரம் கூறுவதை எடுத்தாள்கிறார். இறைவன் நமது மனங்களை கவரும் கள்வன்; கள்வருக்கெல்லாம் தலைவன் எனவும் கூறுகின்றார்.

'செம்மான் மகளைத் திருடும் திருடன்' என கந்தரனுபூதியில் முருகனைக் கூறுகிறார் அருணை முனிவர்.

உயிர்தொறுமொழித்து நிற்கும் கள்வனாம் இறைவனை திருவாசகம்

'திசைமுகன் சென்று தேடினர்க்கொளித்தும்
முறையொளி யெற்றி முன்றவர்க்கொளித்தும்
ஏற்றுமை கொண்டு நோக்குமுள்ளத்து
உற்றவர்வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத் தந்திரத்தில் காண்டு மென்றிருந்தோர்க்கு
அத் தந்திரத் தினவ் வயினொளித்தும் ....''

எனத் தொடர்கின்றது.

ஞானசம்பந்தப் பெருமான் இறைவனை 'உள்ளங்கவர்கள்வன்'' என விளிக்கின்றார்.

அவர் மூன்றாவது வயதிலே தனது தந்தையாருடன் சீர்காழிக் கோவிலுக்கருகேயுள்ள குளத்துக்குச் செல்கின்றார். குளக்கரையில் பிள்ளையை இருத்திவிட்டு தந்தையார் நீராடுகிறார். நீராடச் சென்ற தந்தையை நீண்ட நேரம் காணாத குழந்தை அழுகின்றது. ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க பூத பரம்பரை பொலிய'' எனப் பாடி அழுகின்றது. இறைவன் பாலனாகிய அக்குழந்தையின் அழுகையொலியைக் கேட்ட மாத்திரத்தே உமாதேவியாருடன் தோன்றி பொற்கிண்ணத்திலே சிவஞானமாகிய பாலை எடுத்து ஊட்டினார்கள். பிள்ளையார் அழுகையை நிறுத்தினார். சிவஞானம் கைவரப் பெற்றார். தந்தையார் வந்து பிள்ளையின் வாயில் உள்ள பால் துளிகளைப் பார்த்தார். கோபம் பொங்க, 'உனக்கு யார் பால் தந்தார்கள்' எனக் கேட்டு அடித்தார். ஞானசம்பந்தராகிய குழந்தை தோணிபுரத் தோன்றலை சுட்டுவிரலால் சுட்டிக்காட்டி, தந்தையே, வெள்ளை நிறத் தோடணிந்து, வெண்ணிற இடபத்திலே தூய்மையான வெண்ணிறம் பொருந்திய இளம் பிறைச் சந்திரனை சடையிலே அணிந்து, வெள்ளை நிற சுடலைச் சாம்பலை உடம்பெங்கும் பூசி அம்மையப்பனாக காட்சியளித்த அவனே எனது உள்ளங்கவர் கள்வனாகத் தோன்றி பாலூட்டியவர் என்றார்.

''தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பெருமானி வனன்றே''

ஆகவே வெண்மை நிறங்காட்டி வெள்ளை உள்ளங்கொண்ட சம்பந்தரை ஆட்கொண்டார் இறைவன்.

வள்ளல் அடியிணைக்கு வாய்த்த எமது இதய தாமரைகளை இறைவனின் மலர் தாமரை போன்ற திருவடிகளில் சமர்ப்பித்து வழிபட்டு தூய்மையுடையோமாக.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்தி ஹரக் குருக்கள்.

## வாசகர் திருமுகம்

### மன்னிப்பதற்குரிய மாண்பு

ஜனநாயகம் என்பது உண்மையின் தெரிவு அல்ல என்பதை அண்மையில் ஐ.நா மனிதஉரிமை மன்றில் நிறைவேறிய தீர்மானம் எடுத்துக்காட்டுகின்றது. நவீன விஞ்ஞான ஆதாரங்களுடன் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதற்கான சான்றுகள் இருந்தும் அவற்றினை உலகம் கருத்தில் கொள்ளவில்லை. அதுபோலவே இந்தியச் சட்டசபைத் தேர்தல் முடிவுகளில் தமிழக மக்களும் எமக்கு காட்டினர். அநீதியே எமக்கு நீதி என உலகம் புகட்டும் அளவிற்கு எமது நிலை வந்துவிட்டது.

ஈழத்தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களில் சுயமாக வாழவே விரும்புகின்றனர். அவர்கள் தமக்கு ஏற்பட்ட அவலங்களை மறந்து இயல்பு வாழ்க்கை வாழவே விரும்புகின்றனர். இந்நிலையில் எம்மினத்தின் மீது தவறு இழைத்தவர்கள், யுத்தக் கொடூரங்களைப் புரிந்தவர்கள் தாம் ஒன்றும் செய்யவில்லையே எனக் கூறுவது முழுப் பூசணிக்காயினைச் சோற்றினுள் மறைப்பதுபோல் உள்ளது. தமிழ் மக்களும் இந்நாட்டின் சக பிரஜைகள் என உணர்ந்து அவர்களுக்கு ஏற்பட்ட அவலங்களுக்கு இரக்கப்பட்டு, இழைக்கப்பட்ட தவறுகளை ஏற்றுக்கொள்வதால் சமாதானத்திற்கான முதற்படியான மன்னிக்கும் மாண்பினை தமிழ் மக்கள் நல்குவர். (Riconsile) மறுதலையாக பாற்சோறு பொங்கி கொடியினைப் பறக்கவிடல் அடிமைகொண்டமை பற்றிய புளகாங்கிதமாகவே தென்படும். தென்பகுதியின் இது சமாதானத்திற்கு தீங்கானது. 20ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டமை என்ற செய்தி சுமார் 5 லட்சம் மக்களில் பாரிய பதகளிப்பினை ஏற்படுத்தி உள்ளது. வாழ்வு அநிந்தியம் என்பது உண்மையே. ஆனால் இறப்பினை உறுதி செய்தலும் இறந்தோருக்கு ஆத்ம சாந்திக்கடன் செய்தலும் எமது கிரியை வழியில் அவசியமே.

எனவே அதிகாரிகள் மனம் திறந்து எமது உறவுகளின் இறப்புக்களின் நிலையை அறிய உதவ வேண்டும்.

இன்றைய கணனி யுகத்தில் இடம்பெயர்ந்தோர் அடைபட்டுள்ள முகாம்களில் கையடக்கக் கணனிகள் மூலம் காணாமல் போன உறவுகளின் பெயர், காணாமல் போன இடம் என்ற இரண்டு தரவுகளை மட்டுமே வைத்து எங்கு மரணப் புதைகுழிகள் உள்ளன என்பதனை அனுமானிக்கலாம்.

இதன் மூலம் யுத்தத்தின்போது இறந்தவர்களுக்கு உரிய இறுதிச் சமயச் சடங்குகளை நிகழ்த்தலாம். இதனால் அன்புக்குரியவர்களின் இழப்பால் அவதிப்படும் உறவுகள் சாந்தியடையலாம். சாந்தமடைந்த மனதில் இருந்தே சமாதானம் உருவாக முடியும்.

மருத்துவர் சி.யமுனாநந்தா.

### பிரமுகர்களின் வருகையும் அவர்கள் செய்யும் உதவியும்

வெளிநாடுகளிலிருந்தும் சர்வதேச நிறுவனங்களிலிருந்தும் பிரமுகர்கள் அடிக்கடி இலங்கைக்கு வந்து போவதும் அதைப் பற்றிப் பத்திரிகைகளில் செய்திகளும், கருத்துக்களும் வருவதும் அவர்கள் வழமையான சில செய்திகளை இராஜதந்திர மொழியில் வழங்குவதும் தற்போது அடிக்கடி நிகழும் விஷயங்கள். உண்மையிலேயே அவர்கள் தாங்கள் குறிப்பிடும் மனித விழுமியங்களில் பற்று வைப்பவர்களாக இருந்தால் எதிர்பாராதவிதமாக இங்கொன்றும் அங்கொன்றுமாக பொதுமக்களுடனான பேட்டிகளை நடத்தி அவர்களுடைய மனக்குமுறல்களையாவது புரிந்துகொள்ள முன்வரலாம். ஆனால் நடப்பதோ எதிர்மாறு.

20, 25 வருடங்களுக்கு முன்னரே இடம்பெயர்ந்து முகாம்களிலும் மற்றும் இடங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தங்களுடைய காணிகளில் இவ்வளவு காலமாகத் தொடர்ந்து நடைபெறும் அழிப்பு வேலைகளை அறிந்து கொண்டும் சில வேளைகளில் நேரடியாகக் கண்டுகொண்டுமிருக்கின்றார்கள். இவர்களுடைய மனக்குமுறல்களைப் படம் பிடித்துக்காட்ட எவருமே முன்வரவில்லை. வருபவர்களிடம் இருக்கும் ஒரே விஷயம் 'உதவி' அதைக் கொடுப்பதற்கு அவர் வருவார். அவருடைய நோக்கத்திற்கேற்ப அரசாங்கத்தினால் சில உறுதிமொழிகள் தரப்படும். உதவி ஏற்பாட்டை முடித்துக்கொண்டு அவர் போய்விடுவார். இது தொடரும்.

இறைமையுள்ள அரசாங்கத்தை மீறி ஒன்றுமே செய்யமுடியாது என்று பொதுவாகச் சொல்வார்கள். அப்படியானால் உதவி ஏன் வழங்குகிறார்கள்? சொந்த நலன்களுக்காகவா? அப்படியானால் எமது துயரம் இவர்களுக்கு ஒரு வாய்ப்பா?

கொக்குவில். வை.சந்திரபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கிலாந்து வெஸ்ற் மின்ஸ்ரர் பல்கலைக்கழகத்தின் கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் 'பிள்ளையார் இன்' விடுதியில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

ஐ.ஐ.ரி.நிறுவனத்தின் மனிதவள நிர்வாகக் குழுவின் பணிப்பாளர் நீல் செனவிரத்தின, நிறுவனப் பீடாதிபதி பேராசிரியர் அல்பிரட் பெரேரா, செயற்பாட்டு முகாமையாளர் துசிதா கல்பகே, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் ஐந்து படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்தில் காணலாம். *(படங்கள்: லக்ஷ்மன்)*


**Direct Start**



கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Web Design
- Dip in Desktop Publishing
- Dip in Computerised Accounting

3 months

**கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்**

Certified Computer Accountant

Tally ies 9.0 The qualification for success

40% OFF

உலகின் முன்னணி Accounting Software A/L மாணவர்கள், HNDA, AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கற்கைநெறி.

ASIAN BUSINESS COLLEGE is the only authorized Tally Trainner in Sri Lanka

இலவச பாடநூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.

மேலதிக விபரங்களுக்கு

**ASIAN- CSC COMPUTER EDUCATION**

2G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel :021 222 5677

கிளை :
கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel :077-3122198

Registered with Ministry of Vocational Education


## இரண்டாம் ஆண்டின் கண்ணீர்ப் பூக்கள்

| | | |
|---|---|---|
| அன்னை மடி விழிப்பு |  | அநியாய அழிப்பு |
| 28 . 02 . 1977 | | 03 . 06 . 2007 |

### அமரர் சுப்பிரமணியம் சாந்தீபன்

(உபதபாலதிபர்)

திதி: தேய்பிறைத் திருதியை

அழகுத் திருமகனே எம் அருந்தவப்புதல்வனே சாந்திபா!
ஆசையுடன் தம்பி! என நாம் அழைக்கும் குரலதுவும் ஓய்ந்ததடா
அன்பு முகம் பார்த்து ஆண்டிரண்டு ஆனதடா
பாலகிகள் பரிதவித்து அப்பா எனும் ஓசை ஒரு நாளும் ஓயவில்லை
பாச மனைவியின் சோகக் குமுறல்தான் தீரவோ வழியுமில்லை
படமாய் நீ இருந்து பல கதைகள் பேசுகின்றாய்
ஆண்டிரண்டு சென்றிடினும் மறாத சோகம் மனதில் நிலைக்குதடா
உனை அறிந்தவரும் அழிந்தொழிந்து போவாரடா
எமக்கு இதுவே ஆறாத வலியாச்சு- உன் ஆசை மனைவிக்கோ
சோகமே வாழ்வாச்சு
நீ வித்தகனாய் வாழ்ந்திடவோ விதிதான் விடவில்லையடா
உன் வித்தில் வந்துதித்த இரு முத்துப் புதல்விகளும்
உன் ஆசைக் கனவுகள் அத்தனையும் நிறைவேற்றுவரடா
அதற்கான நல் ஆசியை நீ வானுலகில் தானிருந்து
வழங்கிடுவாய் ஆசையுடன்
உன் ஆத்மா சாந்தி பெற அன்பு உறவுகள் நாம்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

ஆறாத் துயருடன் ஆழ்ந்திருக்கும்,
குடும்பத்தினர்.

## சமயம் சந்நிதிகளில்

சண்டிலிப்பாய், ஜூன் 5

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும் நாளை சனிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழா இடம் பெறும். (201-115)

* * * *

கரணவாய், ஜூன் 5

கரணவாய் வடக்கு சாத்தானப்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தில் மணவாளக்கோல, அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (201-236)

* * * *

வடமராட்சி, ஜூன் 5

தென்புலோலி, காந்தியூர், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் எதிர்வரும் செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் கோவலன், கண்ணகியின் சிறப்புக் கதை கூறல் விசேட பூசையுடன் படிக்கப்பட்டு வருகின்றது. (204-226)

* * * *

வடமராட்சி, ஜூன் 5

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கோவலன், கண்ணகி கதைப்படிப்பு கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. (204-236)

* * * *

சுழிபுரம், ஜூன் 5

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (204-28)

* * * *

சுழிபுரம், ஜூன் 5

சுழிபுரம் - பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் திருவிழா நாள்களில் அன்னதானப் பணியை நடத்த பறாளை தொண்டர் சபை ஏற்பாடு செய்துள்ளது. தினமும் சுவாமி வீதியுலா வந்ததும் மகேஸ்வர பூசை நடைபெறும். (204-28)

* * * *

வடமராட்சி, ஜூன் 5

தும்பளை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த வேள்வி எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை பொங்கல், விசேட அபிஷேகம் என்பவற்றுடன் நிறைவுறும். (204-236)

* * * *

யாழ்ப்பாணம், ஜூன் 5

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் திருமுறைத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

* * * *

யாழ்ப்பாணம், ஜூன் 5

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் ஆலயத்தின் ஏற்பாட்டில் கந்தபுராணப் படிப்பு பூர்த்திவிழா நளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி தேவகி தனராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட (நிதி) மேலதிக அரசாங்க அதிபர் சு.சண்முகரெட்ணம் பிரதம விருந்தி னராகக் கலந்து கொள்வார். (204)

* * * * *

கோப்பாய், ஜூன் 5

கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும். (204-72)

* * * * *

அச்செழு போயிட்டி சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறும். (204-72)

## மரண அறிவித்தல்

### நடராஜா கமலேஷ்வரன் (கணேஷ்)



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கமலேஷ்வரன் 29.05.2009 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும் வீரசிங்கம் (முன்னாள் சாரதி,சாவகச்சேரி ப.நோ.கூ.ச.) - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தர்மினியின் அன்புக் கணவரும் வின்சனா, விஸ்னா ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஷ்வரன், நகுலேஷ்வரன் (ஜேர்மனி), றாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுமதி, கோதை, தயாபரன் (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.06.2009) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
பொ.வீரசிங்கம் (மாமன்).

(சி/558844)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் விமான விபத்தில் சிக்கியோரின் சடலங்கள் எவையும் மீட்கப்படவில்லை

பிரேஸிலியா, ஜூன் 05

''அட்லாண்டிக் கடலில் விழுந்த பிரான்ஸ் விமான நிறுவன விமானத்தின் இருக்கைகள் உட்பட பல்வேறு பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனினும், விமானத்தில் பயணித்தவர்களில் எவர் ஒருவரினதும் சடலமும் இதுவரை மீட்கப்படவில்லை'' என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''இவ்விபத்து ஆழமான கடற்பிராந்தியத்தில் சம்பவித்துள்ளது. இதனால் பிரேஸில், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் 11 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தேடுதல் வேட்டையில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''விபத்து சம்பவித்த பகுதியாக இருக்கக்கூடும் என ஊகிக்கப்பட்ட பகுதியில் 5 கிலோ மீற்றர் பரப்புக்குள் விமானத்தின் பல பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் ஒரு பாகம் 7 மீற்றர் சுற்றளவைக் கொண்டிருந்தது. விமானத்தின் இருக்கைகள் சிலவும் மீட்கப்பட்டன. எனினும், பயணித்தவர்களில் எவர் ஒருவரினதும் சடலமும் இதுவரை கிட்டவில்லை'' என்றும் அவர் விவரித்தார்.

''கடலில் சிதறிக் கிடக்கும் விமானத்தின் பாகங்களை மீட்பதற்காக 4 கடற் படைக்கப்பல்கள் அப்பகுதிக்கு விரைந்துள்ளன. போர் விமானங்கள் அடையாளம் கூண்டுள்ள இடத்திலிருந்து 5 கிலோ மீற்றர் சுற்றளவுப் பகுதியில் இக்கப்பல்கள் விமானப் பாகங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடும்'' என பிரேஸிலின் கடற்படைத் தளபதி டோமிங் கோஸ் நொகீரா தெரிவித்தார்.

''ஒவ்வொரு கப்பலிலும் நீச்சல் வீரர்களும், சுழியோடிகளும் உள்ளார்கள். பாகங்களைச் சேகரிப்பதற்காக ஒவ்வொரு கப்பலோடும் சிறிய கப்பல்களும் இணைக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட பாகங்களை அங்கிருந்து 700 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பிரேஸிலின் பெர்னாண்டோ தீவுக்குத் துரிதமாக எடுத்துச் செல்வதற்காக ஹெலிக்கொப்டெர்கள் பயன்படுத்தப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''மர்மமான முறையில் இந்த விமான விபத்து சம்பவித்துள்ளது. விபத்துக்கான காரணத்தை அறிவதற்காக கறுப்புப் பெட்டிகள் முதலில் கண்டுபிடிக்கப்பட வேண்டும். விமானிக்கும், கட்டுப்பாட்டு அறைக்குமிடையே இடம்பெற்ற தகவல் பரிமாற்றம், குரல் ஆகியவற்றைப் பதிவு செய்யும் கருவிகளைக்கொண்ட அப்பெட்டிகள், கடலுக்கடியில் 6 ஆயிரத்து 600 முதல் 9 ஆயிரத்து 800 அடி ஆழத்துக்குள் கிடக்கலாம்'' என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தண்ணீரில் விழுந்தால் 30 நாள்கள் வரை சமிஞ்ஞைகளை அனுப்பும் வகையில் அந்தக் கருவிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனினும், கறுப்புப் பெட்டிகளை அவ்வளவு எளிதில் கைப்பற்ற முடியாது என அதிகாரிகள் கருதுகிறார்கள். 'டைட்டானிக்' கப்பலின் உடைந்த பாகங்களைக் கைப்பற்றுவதற்குப் பல ஆண்டுகள் ஆனதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

கறுப்புப் பெட்டிகள் நிச்சயம் கைப்பற்றப்படும் என பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ நம்பிக்கை தெரிவித்துள்ளார். ''பிரேஸில் எண்ணை நிறுவனம் ஒன்று, கடலில் 19 ஆயிரத்து 865 அடி ஆழத்தில் எண்ணை வளம் இருப்பதை சமீபத்தில் கண்டுபிடித்துள்ளது. அப்படி இருக்கும்போது 6 ஆயிரத்து 500 அடி ஆழத்திலுள்ள கறுப்புப் பெட்டிகளை கண்டுபிடிக்க முடியாதா?'' என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மோசமான வானிலையின்போது புறப்பட்டுச் சென்ற அந்த விமானம் புயலில் சிக்கிச் செயலிழந்து இருக்கலாம் என கருதப்பட்டது. ஆனால், அனுபவமிக்க 3 விமானிகள் அந்த விமானத்தில் இருந்தார்கள். புயல் தாக்கியிருக்குமானால், அதுபற்றி அவசர அழைப்பு எதுவும் அவர்கள் விடுக்காதது ஏன்? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

பிரேஸில் கடற்கரையிலிருந்து 565 கிலோ மீற்றர் தூரத்தில் விமானம் பறந்தபோது பிரேஸில் விமானப்படை கட்டுப்பாட்டு அறையுடனிருந்து வந்த தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. பின்னர் 40 நிமிடங்களுக்குப் பிறகு, விமானத்தில் மின்சாரக் கோளாறு ஏற்பட்டுள்ளது என தானியங்கி சமிஞ்ஞை வந்துள்ளது.

மின்னல் தாக்கினாலோ, புயல் போன்ற மோசமான வானிலையில் சிக்கினாலோ மின்சாரக் கோளாறு ஏற்படுவது இயல்பு. அதேநேரத்தில் மின்னல் தாக்கிய காரணத்தால் மட்டும் அது நொறுங்கி விழுந்திருக்க வாய்ப்பு இல்லை என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

பிரேஸில் தலைநகரான ரியோ டி ஜெனிரோவிலிருந்து பிரான்ஸின் தலைநகரான பரிஸுக்குச் சென்ற இந்த ஜெட் விமானம், நள்ளிரவில் நடுக்கடலில் நொறுங்கி விழுந்துள்ளது. இந்தக் கோர விபத்தில், விமானத்தில் பயணித்த 12 ஊழியர்கள் உட்பட 228 பேர் பலியாகியுள்ளார்கள்.

விமானத்தின் சிதறிய பாகங்களை மீட்கும் பணி 2 நாள்களாகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பிரேஸிலின் கடலோர நகரமான ரெசிபியிலிருந்து வட கிழக்கில் ஏறத்தாழ ஆயிரத்து 700 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கைகள், உலோகத் துண்டுகள் ஆகிய விமானத்தின் சிதறிய பாகங்கள் கடலில் மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விபத்துக்குள்ளான விமானம் செல்வதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் இரு 'லுப்தான்சா' விமானங்கள் அந்த வழியாகச் சென்றுள்ளன. அதனால் அந்த விமானிகளிடம் விசாரணை நடத்தினால் மேலும் சில விவரங்கள் கிடைக்கலாம் என உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஆப்கானில் குண்டுத் தாக்குதல்: 10 பேர் உயிரிழப்பு; 9 பேர் காயம்

காபூல், ஜூன், 05

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள பக்தியா மாநிலத்தில் இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் 10 பேர் பலியாகினர். 9 பேர் காயமடைந்தனர். இக்குண்டுத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை.

அமெரிக்க இராணுவ முகாமை நோக்கி திரும்பிக்கொண்டிருந்த சிப்பாய்கள் பயணித்த வாகனமொன்றை இலக்கு வைத்து, முதல் வீதியோரக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒருவர் பலியானார். 6 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்குப் பின்னர் வந்த பிறிதொரு இராணுவ வாகனத்தை இலக்கு வைத்து இரண்டாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் 9 பேர் பலியாகினர். மூவர் காயமடைந்தனர்.

வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டு, இராணுவ வாகனங்கள் அண்மியதும் இக்குண்டுகள் தன்னியக்க கருவியால் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன என இராணுவப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் பிற மதத்தவரிடமிருந்து தலிபான்கள் கட்டாய வரி வசூலிப்பு

இஸ்லாமபாத், ஜூன் 05

பாகிஸ்தானில் இஸ்லாமியர்கள் அல்லாதவர்களிடமிருந்து மத வரி என்ற பெயரால் தலிபான்கள் கட்டாய வரி வசூலித்து வருகிறார்கள். இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரிடமிருந்து இந்த வரி அறவிடப்படுகிறது.

தலிபான் இயக்கமும், மற்றுமொரு தீவிரவாத இயக்கமான லஷ்கர்-இ-இஸ்லாமும் இந்த கட்டாய வரி வசூலிப்பில் ஈடுபட்டு வருகின்றன. வரி செலுத்தாதவர்கள் மிரட்டலுக்கும், தண்டனைக்கும் உள்ளாகிறார்கள்.

லஷ்கர்-இ-இஸ்லாம் அமைப்பு, கைபர் கணவாய் பகுதியிலுள்ள பழங்குடி இன மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது. இந்த அமைப்பு பிற மதங்களைச் சேர்ந்தோரிடமிருந்து மதவாரியாக, ஆண்டொன்றுக்கு பாகிஸ்தான் நாணயப்படி ரூபா 1,000 வசூலித்து வருகிறது.

இந்த அமைப்பின் தலைவராக மங்கள் பாக் உள்ளார். இவரிடம் மத வரி செலுத்துவதற்கு இந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

''வரி செலுத்துவோருக்கு நாங்கள் பாதுகாப்பு அளிப்போம்'' என மங்கள் பாக் உறுதியளித்துள்ளார். பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு இந்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# அமெ. ஜனாதிபதி ஒபாமாவுக்கு அல்-குவைதா ஒசாமா எச்சரிக்கை

துபாய், ஜூன் 05

''இஸ்லாமிய நாடுகளுக்கு எதிரான போரை கைவிடாவிட்டால், விபரீதமான அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய கிழக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா புதன்கிழமை சவூதி அரேபியாவை வந்தடைந்தார். அச்சமயத்தில் பின்லேடனின் ஒலி நாடா மூலமான எச்சரிக்கை வெளியாகியது.

பின்லேடனின் பதிவுசெய்யப்பட்ட இந்த எச்சரிக்கை அடங்கிய ஒலிநாடா, கட்டாரில் இயங்கும் அல்-ஜசீரா தொலைக்காட்சிச் செய்தி அலைவரிசையில் ஒலிபரப்பப்பட்டது.

அதில், ''அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராகப் போர் தொடுத்து வந்தார். ஆப்கானிலும், ஈராக்கிலும் வகை தொகையின்றி மக்கள் மடிந்துள்ளனர். இந்த அனர்த்தங்களுக்கும் அவலங்களுக்கும் அவரே பொறுப்பானவராவார்'' என்றும் ஒசாமா பின்லேடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

''ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளையே நீங்களும் கைக்கொண்டுள்ளீர்கள். அவரின் அடிச்சுவட்டையே பின்பற்றுகிறீர்கள். இதனால் விபரீதமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்'' என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அல்-குவைதா தலைவர் பின்லேடன் பாகிஸ்தான் இராணுவ உளவுத்துறை அளித்துள்ள தகவல்களின்படி, இன்னும் உயிருடனில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி சமீபத்தில் அமெரிக்காவிற்கு அறிவித்திருந்தார். அதனை அமெரிக்க வட்டாரம் நம்பவுமில்லை. ஏற்கவுமில்லை. எனினும், ஒசாமாவையும், அவரது சகாக்களையும் மடக்கிப் பிடிப்பதற்கான தேடுதல் வேட்டை தொடரும் என அமெரிக்கா அறிவித்தல் விடுத்தது.

இச்சமயத்தில் ''ஒசாமா பின்லேடன் ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியத்தில் இன்னும் பதுங்கியுள்ளாரா? ஏற்கனவே இறந்துவிட்டாரா? என்ற கேள்விகளுக்கு இதுவரை சரியான பதில்கள் கிட்டவில்லை. இவை மர்மமாகவுள்ளன'' என அஷிப் அலி சர்தாரி பதில் அளித்திருந்தார்.

இந்த மர்மம் நீடித்துவரும் இத்தருணத்தில், ஒசாமா பின்லேடனின் எச்சரிக்கை அடங்கிய ஒலிநாடா வெளியாகியுள்ளது. அந்நாடாவில் ஒலித்த குரல் அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனின் குரல்தான் என புலனாய்வு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

## அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு எகிப்திய வீதிகளில் வரவேற்பில்லை

கெய்ரோ, ஜூன், 05



எகிப்துக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்குடன் தலைநகரான கெய்ரோவிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நிகழ்ந்த வைபவமொன்றில் பங்குபற்றுகின்றார்.

மத்திய கிழக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, நேற்று வியாழக்கிழமை எகிப்தை வந்தடைந்தார். எனினும், வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படவில்லை.

எகிப்தின் தலைநகரான கெய்ரோவை வந்தடைந்த பராக் ஒபாமா அங்கிருந்து குபா மாளிகைக்குப் புறப்பட்டார். இவரது வாகன அணி சென்ற வீதிகளில் இராணுவச் சிப்பாய்கள் மாத்திரம் அணிவகுத்து நின்றார்கள். இவர்களைத் தவிர வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

குபா மாளிகையில் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் ஒபாமாவை வரவேற்றார். இருவருக்குமிடையிலான சந்திப்பு இரு மணித்தியாலங்கள் வரை நீடித்தது. இவ்விருவரும் பல்வேறு விடயங்கள், விவகாரங்கள் ஆகியவை தொடர்பாகக் கலந்துரையாடினார்கள். எனினும் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இதையடுத்து, நேற்று மாலை பராக் ஒபாமா, கெய்ரோ பல்கலைக்கழகத்தில் விசேட உரையாற்றவிருந்தார். இது குறித்து, அவரின் ஆலோசகர்கள் கருத்து வெளியிடுகையில், ''ஜனநாயகம், மனித உரிமைகள், அணு ஆயுத பகிஷ்காரம் ஆகியவை தொடர்பாக அவரின் உரை அமையும்'' என்றார்கள்.

பராக் ஒபாமா எகிப்திய விஜயத்தை மேற்கொண்ட சமயத்தில் ஈரானில், ஈரானிய இஸ்லாமிய குடியரசின் நிறுவுநரான அயத்தொல்லா கொமேய்னியின் 20 ஆவது வருட மறைவு தினத்தையொட்டிய வைபவம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதில் உரையாற்றிய பலர் அமெரிக்காவை காரசாரமாக விமர்சித்தனர்.

ஈரானிய உச்சமட்டத் தலைவர் அயத்தொல்லா அலி கமேனி பேசுகையில், ''உலகில் ஒரு பகுதி நாடுகள் அமெரிக்காவை வெறுக்கின்றன. இது புரையோடிப் போன வெறுப்பு. அமெரிக்கர் முஸ்லிம் நாடொன்றில் இனிமையும் அழகும் நிறைந்த உரைகள் ஆற்றலாம். அவற்றால் எவ்வித மாற்றமும் ஏற்பட்டுவிடாது. செயற்பாடே தேவை'' - என்றார்.

## ஈரானின் அணுத் திட்டங்களை முடக்க இஸ்ரேல் ஒரு தலைப்பட்சமாகச் செயற்படாது

### மாஸ்கோவில் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

மாஸ்கோ, ஜூன் 05

''ஈரானின் சர்ச்சைக்குரிய அணுத் திட்டங்களை முடக்க, இஸ்ரேல் ஒருதலைப்பட்சமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாது'' என இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அவிக்டோர் லிபர்மேன், மாஸ்கோவில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றில் தாம் பேசுகையில் குறிப்பிட்டார்.

ரஷ்ய விஜயத்தை மேற்கொண்ட இவர், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் உட்பட பல முக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இதற்குப் பின்னர் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தம் உரையில், ''இஸ்ரேல் எப்போது ஈரான் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என என்னிடம் சவூதி ஊடகவியலாளர்கள் கேட்டுள்ளார்கள். நாங்கள் ஈரான் மீது குண்டுத் தாக்குதலை நடத்தத் திட்டமிடவில்லை என நான் அவர்களுக்குப் பதில் அளித்தேன். அதையே இங்கும் நான் குறிப்பிடுகின்றேன்'' என்றார்.

''ஈரான் மீது குண்டுவீச்சை நடத்தவேண்டிய கட்டாயம் எமக்கில்லை. இஸ்ரேல் ஒரு வலிமை படைத்த நாடு. எங்களை எங்களாலேயே காத்துக்கொள்ள முடியும். ஈரான் முந்திவிடலாம் என்ற எதிர்பார்ப்பும் எம்மிடமில்லை'' என்றும் அவர் கூறினார்.

''ஈரானின் அணு ஆயுதத் திட்டம் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. அதன் ஏவுகணைச் சோதனைகள், உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளன. ஈரானின் அணு நடவடிக்கைகள் எமக்கு மாத்திரமல்ல. அவை முழு உலகுக்குமே அச்சுறுத்தலானவை. அதனால் ஈரானுக்கெதிராக இஸ்ரேல் மாத்திரம் தன்னிச்சையாக இராணுவ நடவடிக்கை எடுக்கமாட்டாது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெட்டானியாஹு சமீபத்தில், ''அணு ஆயுதங்கள் கொண்ட ஒரு நாடாக ஈரான் திகழ அனுமதிக்கப்படமாட்டாது'' எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அதன் அணுத் திட்டங்களை முடக்க பலவந்தம் பிரயோகிக்கப்படலாம் என்ற கூற்றை நிராகரிக்கவும் முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க சர்வதேச நாடுகள் உடன் முன்வர வேண்டும்

## திராவிடர் கழகம் தீர்மானம்

சென்னை, ஜூன் 05

போர் நெறிமுறைகளை மீறிச் செயற்பட்ட இலங்கை அரசுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்க உலக நாடுகள் உடனடியாக முன்வரவேண்டும் - என்று திராவிடர் கழகச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திராவிடர் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் பெரியார் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தலைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

★ 86 ஆவது வயதில் அடியெடுத்து வைக்கும் முதல்வர் கருணாநிதிக்கு இந்தச் செயற்குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது. துணை முதல்வராக மு.க.ஸ்டாலின் அறிவிக்கப்பட்டு இருப்பதை வரவேற்று இக்குழு பாராட்டுகிறது.

★ சமூக நீதித்துறையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை இனத்தவர்களுக்கான உரிமை வழிப்பட்ட அனைத்து வாய்ப்புகளையும் சட்டப்படி கிடைக்கும் வகையில் ஆவன செய்யுமாறு மத்திய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

★ சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்தை எந்தக் காரணத்தை கொண்டும் முடக்கி போடாமல் விரைவில் செயற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை இந்த கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

★ ஐ.நா. சபையில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமை கோடான கோடி தமிழர்களுக்கு வேதனை தருவதாக உள்ளது.

★ முகாம்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பிச் சென்று குடியேற உடனடி நடவடிக்கை எடுக்க இலங்கை அரசை நிர்பந்திக்க உலக நாடுகள் முன் வர வேண்டும் என்றும் இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

★ ஈழத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். கடைசி நாள்களில் இலங்கை இராணுவம் யுத்த நெறி முறைகளையெல்லாம் புறந்தள்ளி, கொடூரமாகச் செயற்பட்டமைக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது - என்ற தீர்மானங்கள் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# டில்லியி் ரூ.26 கோடி மதிப்பிலான போதைப்பொருள்கள் கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஜூன் 05

பஞ்சாப்பில் இருந்து டில்லிக்கு 26 கிலோ போதைப்பொருளுடன் வந்த இந்திய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தப் போதைப் பொருளின் சர்வதேச மதிப்பு ரூபா 26 கோடி - என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் இந்த போதைப்பொருளை ஐரோப்பிய நாட்டுக்கு அனுப்பும் நோக்கத்தில் கொண்டுவந்தமை விசாரணையில் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அவரிடமிருந்த 26 கிலோ போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றினர். அதன் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.26 கோடி.



முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் தனது 86ஆவது பிறந்தநாளை சென்னை கோபாலபுரம் இல்லத்தில் கேக் வெட்டி கொண்டாடினார். அருகில் தயாளு அம்மாள், மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் குடும்பத்தினர் நிற்பதை காணலாம்.

# எல்லையில் இந்திய இராணுவத்தினர் மீது பாகிஸ்தான் படையினர் துப்பாக்கிச் சூடு

ஜம்மு, ஜூன் 5

காஷ்மீரில் உள்ள இந்திய எல்லைப் பகுதியில் ரோந்து சென்ற இந்திய இராணுவத்தினர் மீது பாகிஸ்தான் படையினர் துப்பாக்கியால் சுட்டனர். சுமார் அரை மணி நேரம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இந்திய இராணுவத்தினர் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தில் எல்லை கட்டுப்பாட்டு கோடு அமைந்துள்ளது. எல்லையில், ஸ்வாஜியான் என்ற இடத்தில் ஒரு கண்காணிப்பு மையம் இருக்கிறது. அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலையில் இந்திய இராணுவத்தினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது பாகிஸ்தான் எல்லைக்குள் இருந்து அந்த நாட்டு படையினர் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினர்.இதன்போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை. பாகிஸ்தானியர் தாக்குதல் நடத்தியபோது இந்திய இராணுவத்தினர் திருப்பிச் சுடவில்லை.

இது குறித்து இந்திய இராணுவப் பிரிகேடியர் குர்தீப் சிங் கூறியவை வருமாறு -

பாகிஸ்தானின் கோப்ரா போஸ்ட் பகுதியில் இருந்து இந்திய எல்லையை நோக்கி துப்பாக்கிச் சூடு நடந்தது. 4 முதல் 5 சிறிய ரக ஆயுதங்கள் மூலமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கலாம் என்று கருதுகிறோம் - என்றார்.




# மன்னிப்புக் கேட்க முடியாது கருணாநிதிக்கு வைகோ பதில்

சென்னை, ஜூன் 04



திரைப்பட இயக்குநர் பாரதிராஜா அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பான பேச்சுக்கு மன்னிப்புக் கேட்க முடியாது - என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

திரைப்பட இயக்குநர் பாரதிராஜா அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டித்து மே 30ஆம் திகதி சென்னையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், பாரதிராஜாவின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்த ஏற்பாடு செய்தவரே முதல்வர் கருணாநிதிதான் அவருக்குத் தெரிந்து, அவரது ஒப்புதல் பெற்றுத்தான் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று வைகோ பேசினார் என செய்தி வெளியானது.

இந்தப் பேச்சு முதல்வர் கருணாநிதி மீது அவதூறு பரப்பும் வகையில் உள்ளது என்று கூறி வைகோவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

வைகோ தனது பேச்சுக்கு 24 மணி நேரத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் இல்லையென்றால் அவர் மீது அவதூறு வழக்கு தொடரப்படும் என்று அந்த நோட்டீஸில் கூறப்பட்டிருந்து.

இதற்கு; வைகோவின் சட்டத்தரணிகள் புதன்கிழமை அனுப்பியுள்ள பதில் நோட்டீஸில் -

வைகோ கடந்த 30 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து வருகிறார். தேர்தலில் வெற்றி, தோல்வி ஆகியவை ம.தி.மு.கவின் தமிழீழக்கொள்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

எனவே, மக்களவைத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து உள்நோக்கத்துடன் வைகோ பேசினார் எனக் கூறுவதை ஏற்க முடியாது.

வைகோவின் பேச்சு இந்திய அரசியல் சட்டம் அளித்துள்ள பேச்சுரிமைக்கு உட்பட்டுள்ளதால், மன்னிப்புக் கேட்க முடியாது. இந்தப் பதிலைத் தொடர்ந்து அவதூறு வழக்குத் தொடர்ந்தால், வழக்குச் செலவை கருணாநிதி செலுத்த வேண்டியிருக்கும் - என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாநில சுயாட்சியை நனவாக்குவோம் பிறந்தநாளன்று கருணாநிதி சூளுரை

சென்னை, ஜூன்04

தி.மு.கவின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநில சுயாட்சிக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம். அதை நிறைவேற்றுவதற்கான எங்கள் பணி பல்வேறு வகைகளிலும் தொடரும் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

கருணாநிதியின் பிறந்தநாளை முன்னிட்டு புதன்கிழமை ஏராளமான தி.மு.க. தொண்டர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

தொண்டர்களின் வாழ்த்துகளைப் பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்த கருணாநிதி இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

எனது பிறந்தநாளை திராவிடர் இயக்கம் மிகுந்த எழுச்சியோடு கொண்டாடுகிறது. நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைகளை மேலும் விரிவுபடுத்துவோம் என இந்நாளில் நான் சூளுரை செய்கிறேன்.

இந்திய ஒருமைப்பாடு, தமிழ் இன உணர்வு, மத நல்லிணக்கம், மதச்சார்பற்ற ஆட்சி முறை மற்றும் மாநில சுயாட்சி என்னும் உரிமை முழக்கங்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

அதனை மேலும் வலிமை மிக்க முழக்கமாக நாடு முழுவதும் ஒலிக்கச்செய்து, அறிஞர் அண்ணா மற்றும் இந்திய நாட்டுப் பேரறிஞர்களின் கனவை நனவாக்க வேண்டும். அதற்கு நானும் எனது தலைமையிலான தி.மு.க.வும் இடைவிடாது பாடுபடுவோம் என்ற சூளுரையை இந்த நாளில் மேற்கொள்கிறேன்.

தி.மு.க.வின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநில சுயாட்சி முழக்கம் இந்தியாவை ஒற்றுமைப்படுத்தவும், பல்வேறு மாநிலங்கள் இந்திய திருநாட்டிற்கு வலுவைச் சேர்க்கவும் பயன்படும். எனவே, மாநில சுயாட்சியை நிறைவேற்றுவதற்கான எங்கள் பணி பல்வேறு வகைகளிலும் தொடரும்.

கடந்த பிறந்த நாளின்போது சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற பாடுபடுவேன் என கூறியிருந்தேன். ஆனால் அத்திட்டம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. எனவே அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து பாடுபடுவேன்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் என்னை சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து கூறியதைப் பற்றிக் கூறவேண்டுமானால், தமிழ்நாட்டிலே உள்ள கட்சிகளிலே இத்தகைய பண்பாடு நீண்ட நாளாக இருந்து வருகிறது. பண்பாடு மிக்கவர்கள், அரசியலில் பக்குவப்பட்டவர்கள் இதுபோன்ற நிகழ்வுகளில் கட்சி வேறுபாடு கருதாமல், தோழமை உணர்வைப் பெற்று நடந்து கொள்வது வரவேற்கத்தக்கது, போற்றத்தக்கது - என்றார்.

உள்ளாட்சி அமைப்புகளில் தி.மு.க. ஆதரவோடு செயற்படும் பா.ம.கவினரை, பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்விக்கு, என்னுடைய பிறந்த நாளில் இதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை - என்றார் கருணாநிதி.

# மக்களவையில் மகளிர் பலம் அதிகரிப்பு

புதுடில்லி, ஜூன் 05

மக்களவையில் மகளிர் உறுப்பினர்களின் பலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்திருப்பதுடன் மக்களவைத் தலைவர் உள்ளிட்ட மூன்று முக்கிய பொறுப்புகளுக்கு மகளிரே தலைமை ஏற்றுள்ளனர்.

குடியரசுத் தலைவராக பிரதீபா பட்டேல், காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராகவும் சோனியா காந்தி, மக்களவைத் தலைவராக மீரா குமார் ஆகியோர் பொறுப்பேற்றுள்ளனர்.

அதேசமயம், மக்களவையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மகளிர் உறுப்பினர்களின் பலம் 59 ஆக அதிகரித்துள்ளது.

ஆளும் கூட்டணியில் காங்கிரஸுக்கு அடுத்ததாக அதிக உறுப்பினர்களைப் பெற்றுள்ள கட்சியாக (19 உறுப்பினர்கள்) உள்ள திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி உட்பட பல பெண் உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். அம்பிகா சோனி, குமாரி செல்ஜா, டி.புரந்தேஸ்வரி, கிருஷ்ண திரத், பனபாக லட்சுமி, பிரணீத் கௌர் மற்றும் அகதா சங்மா ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ள பெண் உறுப்பினர்களாவர்.

# தீவிரவாதி ஹவீஸ் சயீத் விடுதலை: பாக். தூதரிடம் இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஜூன் 05

மும்பைத் தாக்குதல் சதிகாரர் ஹவீஸ் சயீத் விடுதலை செய்யப்பட்டமைக்கு பாகிஸ்தான் தூதரிடம் இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

மும்பையில் கடந்த நவம்பர் மாதம் நடந்த தாக்குதலில் முக்கிய சதிகாரராக ஜமாத் உத்தவா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹவீஸ் முகமது சயீத் செயற்பட்டார்.

இந்தியா வெளியிட்ட ஆதாரங்களைத் தொடர்ந்து சயீத்தையும் கூட்டாளிகளையும் பாகிஸ்தான் அரசு வீட்டுக் காவலில் வைத்தது. லாகூர் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சயீத்தை விடுதலை செய்ய நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

இந்நிலையில், மும்பைத் தாக்குதல் தொடர்பான வழக்கில் நீதிமன்ற ஆவணங்களின் மொழி மாற்றம் செய்யப்பட்ட கோப்புகளை கோருவதற்காக வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனனை பாகிஸ்தானுக்கான இந்திய தூதர் ஷாகித் மாலிக் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

அப்போது, ஹவீஸ் முகமது சயீத் விடுவிக்கப்பட்டமைக்கு இந்தியாவின் [illegible] யும் ஏமாற்றத்தையும் பாகிஸ்தான் தூதரிடம் சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார்.

# 'வெயில்' பிரியங்காவுக்கு கேரள மாநில அரசின் விருது

திருவனந்தபுரம், ஜூன் 05

மலையாளத்தில் சிறந்த நடிகையாக பிரியங்கா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் தமிழில் 'வெயில்' என்ற படத்தில் நடித்தவர் ஆவார்.

கடந்த ஆண்டின் சிறந்த மலையாளத் திரைப் படம், நடிகர், நடிகை உள்ளிட்டோருக்கான கேரள மாநில அரசின் விருதுகள் நேற்றுமுன் தினம் அறிவிக்கப்பட்டன.

விருதுகள் பட்டியலை கேரள கலாசாரத் துறை அமைச்சர் பேபி அறிவித்தார். அதன்படி பிரபல இயக்குநர் அடூர் கோபால கிருஷ்ணனின், 'ஒரு பெண்ணும் இரண்டாணும்' என்ற படம் சிறந்த திரைப்படமாக தேர்வு பெற்றுள்ளது.

இப் படத்தின் இயக்குநருக்கு ஒரு இலட்ச ரூபாவும், தயாரிப்பாளருக்கு இரண்டு இலட்ச ரூபாவும் பரிசாக வழங்கப்படும். இந்தப் படம் சிறந்த இயக்குநர் மற்றும் சிறந்த திரைக்கதை [illegible]ளையும் பெற்றுள்ளது.



சிறந்த நடிகராக லால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். 'தலப்பாவு' என்ற படத்தில் பொலிஸ் அதிகாரியாக சிறப்பாக நடித்தமைக்காக அவருக்கு விருது வழங்கப்படுகிறது.

மலையாளத்தில் சிறந்த நடிகையாக, 'விலப்பங்களுக்கு அப்புறம்' என்ற படத்தில் நடித்த பிரியங்கா தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். இவர் தமிழில் 'வெயில்' என்ற படத்தில் நடித்தவர் ஆவார்.

சிறந்த பின்னணிப் பாடகராக சங்கர்மகாதேவனும், சிறந்த பாடகியாக மஞ்சரியும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கல் சட்ட விரோதம்

## விற்ற பங்குகளை திரும்பப் பெற அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூன் 5

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தொண்ணூறு வீதமான பங்குகளை விற்பனை செய்து அதைத் தனியார் மயப்படுத்தியது தொடர்பான நடவடிக்கைகளில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன எனத் தீர்ப்புக் கூறியிருக்கும் உயர்நீதிமன்றம், அந்தப் பங்குகள் அனைத்தையும் மீளப் பெற்று, நிறுவனத்தை மீண்டும் அரசுடைமையாக்கும்படியும், உரிய நிபுணத்துவ ஆளணியினரை இயக்குநர்களாக நியமித்து நிறுவனத்தைக் கொண்டு நடத்தும்படியும் நேற்று அரசுக்கு உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க,கே. ஸ்ரீபவன் ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயமே இத்தீர்ப்பை நேற்று வழங்கியது. நீதியரசர் நிமால் காமினி அமரதுங்க தயாரித்த நீண்ட தீர்ப்புக்கு மற்றைய இருவரும் இசைவு தெரிவித்திருந்தனர். சுமார் மூன்று மணி நேரம் இத்தீர்ப்பு நேற்று நீதிமன்றில் வாசிக்கப்பட்டது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்டமை சட்ட விரோதமானது, அந்த நடவடிக்கை செல்லுபடியற்றது எனத் தெரிவிக்கும் இந்தப் பரபரப்புத் தீர்ப்பே இன்றுடன் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வழங்கும் கடைசித் தீர்ப்பு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி தனியார் மயப்படுத்தலில் - அரச நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பதில் - பெரும் முறைகேடுகள் நிகழ்ந்திருக்கின்றன எனத் தெரிவித்து, பிரபல அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்கார தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான தீர்ப்பே நேற்று வழங்கப்பட்டது.

இலங்கையின் பிரபல வர்த்தகரான ஹரி ஜெயவர்த்தனாவின் நிறுவனங்களினால் மேற்படி இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பங்குகள் அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. அதிலேயே முறைகேடுகள் இடம்பெற்றன எனவும், அதனால் அந்தப் பங்கு விற்பனை - தனியார் மயமாக்கல் - செல்லுபடியற்றது எனவும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது.

2003 ஆம் ஆண்டு மேற்படி பங்குகளை அறுநூறு கோடி ரூபாவுக்கு இலங்கை அரசிடமிருந்து ஹரி ஜெயவர்த்தனாவின் நிறுவனங்கள் கொள்வனவு செய்திருந்தன. அத்தொகையை இலங்கை வங்கியின் ஐந்து வருட கால பிணை முறியாக ஹரி ஜெயவர்த்தனவின் நிறுவனங்களுக்குச் செலுத்தி, காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்றும் நீதிமன்றம் பணித்தது.

அந்தக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பணிப்பாளர்சபை உடனடியாகக் கலைக்கப்படுகின்றது. சந்தைப்படுத்தல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளில் பத்து வருடங்களுக்கு மேல் அனுபவம் கொண்ட திறமையாளர்களைப் புதிய இயக்குநர்களாக அரசு நியமித்து காப்புறுதி நிறுவனத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்த வேண்டும். எனினும் இதுவரை மேற்படி காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மூலம் ஹரி ஜெயவர்த்தனா தரப்பினர் சம்பாதித்த இலாபத்தையும், 2009 ஜூன் வரையான ஏனைய இலாபங்களையும் அவர்களே வைத்துக் கொள்ளமுடியும் - என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது. (அ-சி)

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 5

வைத்தீஸ்வராக்கல்லூரியின் கவின் கலை மன்றத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஓவியக் கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியில் இடம் பெறவுள் ளது. இக் கண்காட்சியை பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் முன்னாள் ஆசிரிய ஆலோசகர் எஸ். சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைப்பார். (6)

# ஊடகங்களுக்கு எதிராக அரச அதிகாரிகள் வெளியிடும் கருத்துகள் அச்சம் தருகின்றன

## 30 கருத்துச் சுதந்திர அமைப்புகள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு,ஜூன் 05

பத்திரிகையாளர்கள்,ஊடகப் பணியாளர்கள் ஆகியோருக்கு எதிராக அரச அதிகாரிகள் சமீபத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் வன்முறைகளை உருவாக்கக்கூடியவை என அச்சம் வெளியிட்டுள்ள ஊடக அமைப்புகள் இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு கடிதம் எழுதியுள்ளன. ஊடக வியலாளர்களுக்கு எதிரான கருத்துக்களைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென அந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஒஸ்லோவில் இடம் பெற்ற மாநாடு ஒன்றுக்குப் பின்னர் 30 கருத்துச் சுகந்திர அமைப்புகள் கூட்டாக எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் இடம் பெற்றுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சர்வதேச பத்திரிகை சுதந்திரம் மற்றும் மனித உரிமை சமூகம். இலங்கை அதிகாரிகள் வெளியிடும் அறிக்கைகள் காரணமாக பத்திரிகையாளர்களின் உயிருக்கு நேரடியாக அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புப்பட்டிருந்தனர் என சுயாதீன பத்திரிகையாளர்கள் மற்றும் பணியாளர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஜூன் முதலாம் திகதி மூத்த பத்திரிகையாளரும் தொழிற்சங்க வாதியுமான போத்தல ஜயந்த கடத்தப்பட்டு,தாக்கப்பட்ட சம்பவம் குறித்து உங்களது கவனத்தை ஈர்க்க முயல்கிறோம்.

தாக்குதலுக்கு உள்ளாவதற்கு முதல் நாள் அரச உறுப்பினர்கள் இவர்மீது குற்றச்சாட்டுகளை சுமத்தினர். அரச எதிர்ப்பு பிரசாரம் மூலம் அரசின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முயன்றார் என குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

உலகில் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான இடமாக இலங்கையைக் குறிப்பிடுவது உங்களுக்குத் தெரியும்.

ஊடகப் பணியாளர்கள் கடத்தப்பட்டமை கொலை செய்யப்பட்டமை, தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் உங்களது அரசில் நாளாந்த விடயமாகியுள்ளது -என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# நயினைப் பெருந்திருவிழாவில் குடும்பமாகக் கலந்து கொள்வோர் அல்லைப்பிட்டியில் அனுமதிப்பத்திரம் பெற்றால் போதும்

## காரைநகர் கடற்படைத் தளபதி தெரிவிப்பு

எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவில் கலந்துகொள்வதற்கு குடும்பமாகச் செல்பவர்கள் அல்லைப்பிட்டி சோதனை நிலையத்தில் ஒரு அனு மதிப்பத்திரம் பெற்றால் போதுமானது.

காரைநகர் கடற்படைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆலய பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஆலயத்தில் நேற்று நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாத்திரிகர்களின் வசதிகருதி அனுமதிப் பத்திரம் பெறும் நடைமுறையை இலகுவாக்கியுள்ளோம். குடும்பமாக வருபவர்கள் குடும்பஉறுப்பினர்களின் விவரங்களை ஒரே தாளில் எழுதிச் சமர்ப்பித்தால் ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இந்த நடைமுறையை யாத்திரிகர்கள் கடைப் பிடித்தால் சிரமங்களை தவிர்க்கமுடியும்.

பாதுகாப்பைப் பொறுத்தவரையில் பாரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. வழமை போன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

கடற்பயணத்தின் போது யாத்திரிகர்கள் உயிர் பாதுகாப்பு அங்கிகளை கண்டிப்பாக அணிய வேண்டும் - என்று தெரிவித்தார்.

குறிக்காட்டுவான், நயினாதீவு இறங்கு துறைகளில் பொலிஸார் பணிபுரிவர், போக்குவரத்துப் பொலிஸாரும் சேவையில் இருப்பர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (1-111)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 5

புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று மதியம் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் பொ. வரதகுல சிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பூ.குகதாசனும் சிறப்பு விருந்தினர்களாக புத்தூர் பரிலுக்கா மெ.தேவாலய குரு முதல்வர் வண.பிதா கிறிஸ்ரிகுமார் தங்கராஜாவும், டெனிஸ் அகதிகள் கழக தொழில்நுட்ப வெளிக்கள உத்தியோகத்தர் ஐ.ஏ.பரமேஸ்வரனும் கலந்துகொள்ள வுள்ளனர். (6)

# வன்னி அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்கொழும்பு மாவட்டம் மாரவிலவில் நீதிமன்றக் கட்டடம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைத்த பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வெளிப்படையாகக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் இடம்பெயர்ந்த அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள 'நிவாரணக் கிராமங்களுக்கு' நான் நேரில் சென்று பார்த்தேன். அவர்கள் படும் கஷ்டங்களையும் வேதனைகளையும் என்னால் விளக்கவே முடியாமல் உள்ளது.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஓர் இனத்தவர் என்றோ, இங்கு பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனம் என்ற வேறு பாடுகள் ஏதும் இல்லை என்றோ இனிமேலும் நாங்கள் தொடர்ந்து கூறிக் கொண்டிருப்போமேயானால் அது முழுப் பொய் அன்றி வேறில்லை.

அகதிக் குடும்பங்கள் தங்கியுள்ள செட்டிக்குளம் முகாமுக்குச் சென்றேன். அவர்கள் அனுபவிக்கும் மோசமான கஷ்ட சூழலை என்னால் விவரிக்க இயலாது. அவர்களை ஆற்றுப்படுத்த என்னால் இயலவில்லை. அளவுக்கு அதிகமான வேதனைகள், உள நெருக்குகளுக்கு மத்தியில் அவர்கள் பிழைத்திருக்கின்றார்கள்.

எங்கள் பக்கத்தில் நாம் மிகப் பிரமாண்டமான கட்டடங்களை அமைத்துள்ளோம். ஆனால் இந்த அகதிகளோ கொட்டகைகளில் - தற்காலிகக் கூடாரக் கொட்டில்களில் - வசிக்கின்றார்கள். ஒரு கூடாரக் கொட்டிலில் பத்து அகதிகள் வசிக்க் வேண்டிய நிலை. இந்தக் கூடாரக் கொட்டிலின் நடுமத்தியில்தான் அவர்கள் நிமிர்ந்து நிற்கமுடியும். அப்படியே நிமிர்ந்தபடி கூடாரத்தின் பிற பகுதிகளுக்கு அவர்கள் நகர முற்பட்டால் அவர்களது கழுத்துப் பகுதியே முறிந்துவிடும்.

இயற்கைக் கடனைக் கழிப்பதற்காக - தங்களின் முறையை எதிர்பார்த்து - ஐம்பது, நூறு யார் தொலைவுக்கு அகதிகள் வரிசையில் நிற்பதைக்கூடக் காணமுடியும். இதுதான் செட்டிக்குளம் முகாமில் அகதிகளின் நிலை.

### என்னால் அவர்களைப் பார்த்து புன்னகை செய்ய முடியவில்லை

இந்த நாட்டின் பிரதம நீதியரசர் வந்திருக்கின்றார் என அறிந்து அவர்கள் என்னைப் பார்த்துப் புன்னகைக்க முற்பட்டனர். பதிலுக்கு நானும் அவர்களைப் பார்த்து புன்னகைக்க முயன்றேன். ஆனால் என்னால் இயலவில்லை. எனது உணர்வுகளை வெளிப்படுத்துவதில் நான் தோற்றுப்போனேன். அவர்களின் சொல்லொணா துயரங்களுக்காக நாங்களும் அவர்களுடன் சேர்ந்து அழுகின்றோம் என்பதைக்கூட என்னால் அவர்களிடம் கூறமுடியவில்லை. அவர்களுக்குப் புதிய உடையை நான் பெற்றுத் தருவேன் என்பதைக் கூட என்னால் அவர்களுக்குத் தெரிவிக்க முடியவில்லை.

அவர்களுக்கு உரியளவில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். நாம் அவர்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்கத் தவறுவோமானால் அதற்காக வசைக்கு உள்ளாவோம்.

அவர்கள் இந்த நாட்டின் சட்டங்களிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாத நிலையில் உள்ளனர். எங்கள் நாட்டின் சட்டங்களின் கீழான நீதிமன்றங்களின் முன்னால் அவர்களின் அவல நிலையும், துயரங்களும் கொண்டுவரப்படவேயில்லை. இதனை நான் வெளிப்படையாகவே கூறுகிறேன். இதைக் கூறியமைக்காக நான் தண்டிக்கப்படலாம்.

- இப்படிப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அங்கு தெரிவித்தார்.

பிரமத நீதியரசர் என்ற முறையில் அவரது பணி இன்றுடன் பூர்த்தியாகின்றது. உரிய வயதை எட்டியதால் அடுத்து வரும் தினங்களில் அவர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்தல், ஆழிப் பேரலை மீள் கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டைத் தடுத்தல் போன்ற சர்ச்சைக்குரிய தீர்ப்புகளை உயர்நீதிமன்றத்தில் வழங்கிய சரத் என். சில்வா, ஓய்வு பெற்றுச் செல்லும் சமயத்தில் தமிழ் அகதிகளின் நிலை குறித்து கண்ணீர் மல்காத முறையாக இப் படிக் கருத்து வெளியிட்டுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமாகாணபிரதம செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் முன்னாள் யாழ். மேலதிக அரச அதிபர்

**உயர்திரு. ஆ. சிவசுவாமி**

அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், மேலதிக அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுவரும்

**திருமதி ரூபினி வரதலிங்கம்**

அவர்களையும் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்.

உதவி அரசாங்க அதிபரும் உத்தியோகத்தர்களும்.



## பொருளியற்கல்லூரி யாழ்ப்பாணம்

இந்து சமயம் - Mr.தரன்

A/L2011

சனி, ஞாயிறு

பிரிவு - I - 12மணி

பிரிவு - II - 1மணி

A/L 2010 - 11மணி

A/L 2009 DAY CLASS

திங்கள், செவ், புதன், வியா - 10மணி

**BARATHY - சித்தன்கேணி**

A/L 2011சனி, ஞாயிறு - 6.30am

2010 - 2.15pm

Note: இணுவில் பொருளியற்கல்லூரி ... அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.


## மரண அறிவித்தல்

### செ.சிவஞானம்

இளைப்பாறிய வவுனியா அரசாங்க அதிபரும் சத்தியசாயி சேவா நிலையத்தின் முன்னைநாள் மத்திய இணைப்பாளருமான செ.சிவஞானம் 03.06.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சறோஜினி, றோஹினி, சித்திரா, காலஞ்சென்ற ராஜராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதாசன், சிவநாதன், நிமலநாதன், ஆகியோரின் அன்பு மாமனும் அரிச்சந்திரன், அரவிந்தன், சிவப்பிரியா, சிவரம்யா, மயூரன், காலஞ்சென்ற மீரா மற்றும் றஜன், சாய் ஆகியோரின் அன் புப் பேரனும் நிஷா, அனுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் சிவமலர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், செல்வரட்ணம், புஷ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பஞ்சாட்சரம், குலதேவி, சறோ ஜினிதேவி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.06.2009) சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 7மணி வரை ஜயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (07.06.2009) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு (இந்துக்கள் பகுதி) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16-2/1, அலெக்சான்டர் வீதி,
கொழும்பு - 06,
17A, பர்னாந்து வீதி, கல்கிசை.

தகவல்:
ச.சிவதாசன் (2596429),
ச.சிவநாதன் (2725207).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முகாம்களில் ஐ.நாவும் செஞ்சிலுவையும் சுயேச்சையாகச் செயற்பட அனுமதி இல்லை

## அரச பிரதிநிதிகளின் வழிகாட்டலிலேயே செயற்பட முடியும்

கொழும்பு, ஜூன் 05

வன்னியில் இடம்பெயர்ந்த பொதுமக்களைத் தங்க வைத்துள்ள முகாம்களில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களோ, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவோ முழுமையாக அதாவது சுயேச்சையாக செயற்படுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

எமது பிரதிநிதிகளின் வழிகாட்டலிலேயே அவர்கள் செயற்பட முடியும். அவ்வாறு இல்லையாயின் நாம் அவர்களின் கைப்பொம்மைகளாகச் செயற்பட வேண்டியவர்களாகி விடுவோம்.

- இவ்வாறு மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களில் அதிக எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் இருக்கின்றமையால், அவர்கள் அடையாளம் காணப்படும்வரை அங்குள்ள மக்கள் வெளியில் நடமாட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அகதிமுகாம்களில் பெரும் எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் உள்ளனர். மக்கள் இடம்பெயர்ந்து வரும்போது அவர்களும் மக்களோடு மக்களாக அந்த முகாம்களுக்கு வந்தனர்.

### புலிகளை அடையாளம் காணும் நடவடிக்கை தொடர்வதாலேயே மக்கள் வெளியே செல்ல அனுமதி இல்லை

எமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, அகதி முகாம்களில் அதிக எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கும் புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கையில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம்.

இதுவரை அடையாளம் காணப்பட்ட புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மக்களோடு மக்களாக வந்த புலிகளை நாம் அப்போது உடல் ரீதியாக மட்டுமே சோதனை செய்தோம். அவர்கள் புலிகளா அல்லது பொதுமக்களா என்று கண்டறியக் கூடிய வாய்ப்பு அந்த நேரத்தில் இருக்கவில்லை. இப்போதைய சூழ்நிலைதான் அடையாளம் காண்பதற்கு வாய்ப்பாகவுள்ளது.

எனினும், இதுவரை நாம் பலரை முகாம்களில் இருந்து விடுவித்து அவர்களின் உறவினர்களிடம் இணைத்துள்ளோம். கடந்த வாரம் கூட மூவாயிரம் பேர் இவ்வாறு இணைக்கப்பட்டனர்.

புலிகளை அடையாளம் காணும் நடவடிக்கை தொடர்வதாலேயே முகாம்களில் உள்ளவர்களை வெளியில் செல்ல அனுமதிக்க முடியாதுள்ளது. வன்னியில் இடம்பெயர்ந்த பொதுமக்களைத் தங்க வைத்துள்ள முகாம்களில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களோ, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவோ முழுமையாக - சுயேச்சையாக - செயற்படுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

எமது பிரதிநிதிகளின் வழிகாட்டலிலேயே அவர்கள் செயற்பட முடியும். அவ்வாறு இல்லையாயின் நாம் அவர்களின் கைப்பொம்மைகளாகச் செயற்பட வேண்டியவர்களாகி விடுவோம் - என்றார்.

(அ-சி)

# ஊடகவியலாளர் போத்தல மீதான தாக்குதல் குறித்து ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் விசாரணை

கொழும்பு, ஜூன் 05

ஊடகவியலாளர் போத்தல ஜயந்த மீதான தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர் போத்தல ஜயந்தவின் வைத்தியசாலைக் கட்டணங்களை லேக்ஹவுஸ் நிறுவனம் வழங்கும். ஊடகவியலாளர்கள் எவருக்கேனும் அச்சுறுத்தல்கள் இருக்குமாயின் அதுபற்றி விசாரிக்க முடியும்.

சில ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து பணம் பெற்றுக்கொண்டமை தொடர்பாக இடம்பெற்று வரும் விசாரணைகள் முடிவடைந்த பின்னரே அதுபற்றிய தகவல்களைக் கூற முடியும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்ததன் பின்னர் இலங்கைக்குக் கூடுதலான வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்திருக்கின்றன. அரசு கடந்த வருடம் 865 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாகப் பெற்றுள்ளது. இந்த வருட இறுதியில் 100 கோடி டொலர் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகளைப் பெற இலங்கை முதலீட்டுச் சபை எதிர்பார்த்துள்ளது - என்றார்.

## அகதிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அகதிகளை நல்லமுறையில் கவனிக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியாவில் உள்ள அகதிகளை முடியுமானவரை விரைவாக மீள்குடியமர்த்தவே நாம் முயற்சி செய்கிறோம். அதுவரைக்கும் நாம் அம்மக்களை நல்ல முறையில் கவனிக்கின்றோம்.

குறிப்பாக ஐ.நாவை விடவும் நாம்தான் இந்த மக்களை நல்லமுறையில் கவனிக்கின்றோம். ஐ.நா. இம்மக்களுக்கு கூடாரங்களை வழங்குகின்றது. நாம் வீடுகளை வழங்குகின்றோம்.

இந்தக் கூடாரங்களை வழங்காது வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு நாம் பல தடவைகள் ஐ.நாவிடம் கேட்டிருந்தோம். வீடுகள் கொடுத்தால் அது நிரந்தர வதிவிடமாகிவிடும் என்று ஐ.நா. கூறுகின்றது.

பணத்தட்டுப்பாடு எதுவும் ஐ.நாவுக்குக் கிடையாது. பணத்தை அச்சடிக்க வேண்டிய தேவையும் ஐ.நாவுக்கு இல்லை. அந்த அமைப்பு பல நாடுகளிடமிருந்து பணத்தைப் பெறுகின்றது. அப்படியான நிலையில் இந்த மக்களை நல்லமுறையில் கவனிக்கலாம்.

அகதி முகாம்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அப்படி உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பட்டினியால் மரணித்தால் அதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது. உலக உணவுத் திட்டமே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். அந்த அமைப்புத்தான் உணவுக்கான பொறுப்பை ஏற்றுச் செயற்படுகின்றது - என்றார். (அ-சி)

## ஏ-9 வீதியூடாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகம் அறிவித்திருக்கின்றது.

இச்செயற்பாட்டில் ஈடுபடவிரும்புவோர், கொழும்பு - 01, உலக வர்த்தக மைய மேற்குக் கோபுரத்தின் நான்காம் மாடியில் உள்ள ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார் என கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படையினரால் மீட்கப்பட்ட கப்பலில் 884 மெற்றிக் தொன் நிறையுடைய உணவு, மருந் துகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் காணப்பட்டன என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

எனினும், கப்பலில் இருந்தவர்கள் எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை எனத் தெரிவித்த கடற்படைப் பேச்சாளர், அந்தக் கப்பலை தற்போது கரைக்குக் கொண்டுசென்று கொண்டிருக்கிறோம் எனவும் கூறினார்.

அந்தக் கப்பலை பல நாள்களாக தாம் அவதானித்து வந்ததாகவும் இன்றே (அதாவது நேற்று) கைப்பற்றியதாகவும் கடற்படைப் பேச்சாளர் மேலும் சொன்னார்.

'வணங்கா மண்' என்ற பெயருடன் பிரிட்டனிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி புறப்பட்ட இந்தக் கப்பல், பிரான்ஸில் 'கப்டன் அலி' என பெயர் மாற்றம் பெற்று இலங்கை வந்துள்ளது என்றும் கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இந்தக் கப்பல் தொடர்பாக பிரிட்டிஷ் அரசு எந்தவித தகவல்களையும் இலங்கைக்குத் தரவில்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித்த ஹோகன்ன தெரிவித்தார். (அ-சி)

## யுத்தக் குற்றங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, யுத்தத்தினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் சுதந் திரமாக நடமாட அனுமதியளிக்கப்பட வேண்டும் - என்றும் நவநீதம்பிள்ளை தெரிவித்தார். (அ-சி)

## கைதான வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டார்கள் என்ற சந்தேகம் காரணமாக வைத்தியர்கள் குற்றப் புலனாய்வுத் துறையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு தடுத்துவைக்கப்பட்டிருப்பார்கள். அதன் பின்னர் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும். ஆனாலும் இடைப்பட்ட காலத்தில் மாதம் ஒருமுறை அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் - என்றார்.

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களிலிருந்து செயற்பட்ட அரச வைத்தியர்கள் மூன்று பேர் தற்போது அரசால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (அ-சி)

# உலகக் கிண்ண ருவன்ரி - 20 போட்டிகள் இன்று ஆரம்பம்

லண்டன், ஜூன். 5

இரண்டாவது உலகக் கிண்ண ருவன்ரி - 20 போட்டிகள் இன்று இங்கிலாந்தில் ஆரம்பமாகின்றன. இன்று தொடக்கம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப் போட்டிகளில் இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து உள்ளிட்ட 12 நாடுகள் 4 பிரிவுகளாக களமிறங்குகின்றன.

ஒவ்வொரு பிரிவில் உள்ள அணிகளுக்கும் தலா 2 போட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் வெற்றியடையும் அணிகள் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் சுப்பர் - 8 போட்டிகளுக்குத் தகுதி பெறும். இம் மாதம் 18, 19 ஆம் திகதிகளில் அரையிறுதிப் போட்டிகளும் 21 ஆம் திகதி இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளன. (6)

## அரசியல் தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கக் கூடிய, தமிழ் மக்கள் உட்பட அனைத்து சமூகத்தினரும் தமக்குப் பாதுகாப்பானது என்று உணரக் கூடிய அனைத்துச் சமூகங்களின் கௌரவத்தையும் சுயமரியாதையையும் உறுதி செய்யக்கூடிய முயற்சிகளுக்கு இந்தியா தனது ஆதரவை வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வுக்கு இந்தியா உரிய பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ-சி)

## வெள்ளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிச்சலே மொன்டஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது, விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் வெள்ளைக்கொடியுடன் வந்த வேளை சுடப்பட்டது யுத்தகுற்றம் என ஐ.நா. கருதுகிறதா? என எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். வெள்ளைக்கொடியுடன் வரும் ஒருவரை சுடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது நடைபெற்றதா இல்லையா என்பதை ஆராய்ந்த பின்னரே இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கலாம்- எனவும் மொன்டஸ் மேலும் தெரிவித்தார். (சி)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Aat (Sri lanka)
Foundation, Intermediate, Final
Medium :- தமிழ் & English

External Degree
1 st in Com, B.com (1,11 & Final)
பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Further Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.

SHAMROCK
ஈச்சமோட்டை,யாழ்
A/L 2011
இணைந்த கணிதம்
T.தவசேகர் B.Sc. SAT,SUN 5 PM
* தமிழ் - S.சிவா
* அரசியல் - T.சஜன்
* கிறிஸ் - U.L.மேரி
* புவி - A.J.மில்ரன்
* நாடகம் - J.ஜோன்
* அளவை - R.றமணன்
* இந்து - S.கார்த்திக்
* ENG - T.MUTHU

வெளிவந்துவிட்டது
A/L வணிகக்கல்வி - 2009 ஆக்கம் : சிவனேசராஜா
பகுதி 1,11
A/L - பௌதிகவியல்-2009 ஆக்கம் : வர்ணம்
விற்பனையாகிறது
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

தேசிய சேமிப்பு வங்கி முகாமைத்துவ பயிலுநர் தெரிவுப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் : 06.06.2009 சனி பி.ப. 3 மணி
சனி, ஞாயிறு 3 - 5
* பொது உளச்சார்பு, பொது அறிவு விடயங்கள் நடைபெறும். இது தொடர்பான ஏனைய பரீட்சைகளுக்கும் ஏற்ற வகுப்பாகும்.
* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

இன்று ஆரம்பம் PHYSICS WORLD
TUITION CENTRE
பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி
(குருகுலம் அருகில்)
பௌதிகவியல் - By.M.கருணாநிதி
2010 A/L - வெப்பவியல்
ஆரம்பம் 05.06.2009 Fri 5மணி
2011 A/L - பொறியியல்
ஆரம்பம் 05.06.2009 Fri 4மணி

A/L வரலாறு - 2011
ஆசிரியர் -M.பத்மன் B.A(HONS) HIS SPI, M.A
இடநெருக்கடியைத் தவிப்பதற்கும் மாணவர் நலன் கருதியும் மாணவர்களின் வேண்டுகோளுக்கமையவும் இவ் ஆசிரியர் கற்பிக்கும் பின்வரும் இடங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
D.M.I நாவலர் வீதி, யாழ்.
BITSMAN மானிப்பாய்.
NEW A.A.C சுன்னாகம்.
ஆரம்பம்-நாளை(06.06.2009)சனிக்கிழமை அலுவலகங்களில் நேர அட்டவணையைப் பெற்றுக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.